பக்கங்கள்: 20 விலை:20 ரூபா


# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 27, திங்கட்கிழமை 12.12.2016 கதிர் 37

Facial, Straightening, Bleaching, Face Massaging, Threading.
WELLA Hair Dressing
Ladies & Gents
வெலா சலூன்
இல.8, நவீன சந்தை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 658 4453, 021 205 4116

# ஒற்றையாட்சியை ஐ.தே.க. செயற்குழு வலியுறுத்தவில்லை!

### கூட்டமைப்பிடம் ரணில் எடுத்துரைப்பு



கொழும்பு, டிசெம்பர் 12

ஒற்றையாட்சி மூலம் மட்டுமே தீர்வு என்றும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீடிக்கலாம் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது என வெளியான செய்திகள் தவறானவை.

இதனைஐ.தே.கட்சியின்தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையிடம் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

பக்கம் 19 »

## மத்திய வங்கி ஆளுநர் பதவி விலகத் தீர்மானம்?



கொழும்பு, டிசெ.12

மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தனது பதவியை இராஜினாமாச் செய்ய விரும்புகிறேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறி வித்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

தற்போதைய நிலைமையைப் பொறுத்த வரையில் தான் இராஜினாமா செய்வது நல்லது என இந்திரஜித் குமாரசுவாமி ஜனாதிபதியிடம் கூறியிருக்கின்றார்.

ஆனால், அவர் அவ்வாறு இராஜினாமா செய்வதற்கு எந்த வித காரணங்களும் இல்லை என ஜனாதிபதி அவருக்கு தெரி வித்தார் எனவும் தெரியவருகின்றது.

பக்கம் 19 »

## வவுனியாவில் அந்தோனியார் சிலை விஷமிகளால் உடைத்துச் சேதம்!

### நேற்றுமுன்தினம் இரவு சம்பவம்



வவுனியா, டிசெ.12

வவுனியா, ஜோசப்வாஸ் வீதியில் உள்ள அந்தோனியார் சிலை நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு விஷமிகளால் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா, ஹொறவப்பொத்தனை வீதியில் இறம்பைக்குளம் ஜோசப் வாஸ் வீதி அமைந்துள்ளது. இந்த வீதியின் ஆரம்ப இடத்தில் பிரதான வீதிக்கு அண்மித்ததாக அந்தோனியார் சிலை வைக்கப்பட்டிருந்தது. இதுவே இனந்தெரியாத விஷமிகளால் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவில் மத முரண்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் இது மேற்கொள்ளப்பட்டதா என்ற சந்தேகம் எழுந்திருப்பதாகப் பலரும் தெரிவித்துள்ளனர். (இ-100)

## வடக்கிலுள்ள அகதி முகாம்களில் வாழ்வோர் ஆயுதம் ஏந்தாதவாறு நீதி வழங்கவேண்டும்

### பௌத்த தேரர்கள் முன் ஜனாதிபதி உரை



கொழும்பு டிசெ.12

வடக்கிலுள்ள அகதி முகாம்களில் வாழ்கின்ற மக்கள் மீண்டும் ஆயுதம் ஏந்தாதவாறு அனைவருக்குமான சமூக நியாயத்தை நிறைவேற்ற நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பௌத்த தேரர்கள் மத்தியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

மேலும்,நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு நாடு முகங்கொடுத்துள்ள சவால்களை வெற்றி கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துருகிரிய ஹபரகட ஆர்ய நிகேதன பிக்குமாருக்கான பயிற்சி நிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டசங்கைக்குரிய ஹங்கொடவில சோம தேரர் பிக்குமார் விடுதியை சாசனத்துக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வு நேற்றுஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அதில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

பக்கம் 19 »

## சிலாவத்துறை கடலில் 29 மீனவர்கள் கைது!

மன்னார், டிசெ.12

மன்னார் , சிலாவத்துறை கடற் பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் 29 பேரை மன்னார் கடற்படையினர் கடந்த சனிக்கிழமை மாலை கைது செய்துள்ளனர் என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்தார்.

இதன்போது குறித்த மீனவர்களிடம் இருந்து 6 டிங்கி படகுகள், 6 தொகுதி வலைகள், 5 நீரில் மூழ்கப் பயன்படுத்தும் முகக் கவசம், 10 சோடி பாதணிகள் மற்றும் ஜீ.பி.எஸ்.கருவி என்பனவும் கைப்பற்றபட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

மன்னார்கடற்படையினர்கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது அவர்கள் இவர்களின் நடவடிக்கையை அவதானித்திருந்தனர். இதன்போது

பக்கம் 19 »

### அளப்பு அருணாசலம்



உவர் என்னத்தைச் சொன்னாலும் உந்த காவியுடை காரருக்கு காதில பூராது பாருங்கோ...!

## ஊடகவியலாளர் மீதான தாக்குதல்: முழுமையான விசாரணை ஆரம்பம்

### அரசாங்க தகவல் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு டிசெ.12

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கடற்படையினரின் தாக்குதலில் ஊடகவியலாளர்கள் இருவர் காயமடைந்தனர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக அரசாங்கம் முழுமையான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேற்படி ஊடகவியலாளர்கள் செய்தி அறிக்கையிடலின்போது ஊடக ஒழுக்கக் கோவை விதிகளைப் பின்பற்றத் தவறியதாலேயே இவ்வாறான சம்பவம் இடம்பெற்றது என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், சர்வதேச கப்பல் போக்குவரத்து மற்றும் துறைமுகப் பாதுகாப்பு சட்டத்தின்படி இவ்வாறான பிரச்சினைகளில் கடற்படைத் தளபதியின் தனிப்

பக்கம் 19 »

## அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு விற்றால் சிக்கல் வரும்

### எச்சரிக்கிறார் இந்திய முன்னாள் இராஜதந்திரி

மொஸ்கோ, டிசெ.12

அம்பாந்தோட்டை துறைமுகம்சீனாவுக்குவிற்கப்படுவது, இந்தியாவுக்கு கவலையளிக்கும் விடயம். அது மட்டுமன்றி, இது பெரிய சிக்கலான விவகாரமாக உருவெடுக்கும் என்று இந்தியாவின் முன்னாள் இராஜதந்திரிகளில் ஒருவரான யோகேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

'இந்தியப்பெருங்கடலில் இந்தியா – சீனா இடையே இழுபறிப் போர்' என்ற தலைப்பில் ரஷ்யாவின் 'ஸ்புட்னிக்' இதழ் செய்தி ஒன்றிலேயே அவரது இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

பிலிப்பைன்ஸ் மற்றும் மத்

பக்கம் 19 »

தமிழ்பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

# பேசாலையில் டெங்கு நோய் அதிகரிப்பு; கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை

*கழிவகற்றல் மந்தமே காரணம் எனக் குற்றச்சாட்டு*

மன்னார், டிசெ.12

மன்னார் மாவட்டத்தில் அதிக சனத்தொகை கொண்ட பேசாலையில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இப் பகுதியில் நேற்று வரை சுமார் ஐம்பது பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையின் பின்னர் உயிர் தப்பியுள்ளனர் என பேசாலை டெங்கு தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

வீடுகளில் சேர்த்து வைக்கப்படும் குப்பைகளையும் வீதிகளில் உள்ள குப்பை கூளங் களையும் அப்புறப்படுத்துவதற்கு மன்னார் பிரதேச சபையிடம் போதிய வாகனங்களோ ஆளணி வசதியோ இல்லை என்று பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

வீதிகளிலும் வீடுகளிலும் குப்பைகள் தேங்கியிருக்கின்ற நிலையில், அண்மையில் பெய்த மழையால் அவற்றில் இருந்து நுளம்புகள் பெருகியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இங்கு டெங்கு நோய் அதிகரிப்பதற்கு இதுவே காரணம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

பேசாலையில் கடந்த மே மாதம் 13 டெங்கு நோயாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டனர். பின்னர், நவம்பரிலும் 14 பேர் பீடிக்கப்பட்டனர். இந்த எண்ணிக்கையானது, மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பகுதி எனச் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

மன்னார் பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியர் திருமதி எஸ்.ஆர்.யூட்டின் வழிகாட்டலுக்கு அமைய மன்னார் வைத்திய அத்தியட்சகர் திருமதி றஜனி அன்ரன் சிசிலின் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம அலுவலகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் பொதுமக்களுடன் இணைந்து பேசாலை உட்பட மன்னாரின் பல இடங்களிலும் டெங்கு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ம-112)

# அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் ஐந்தாவது நாளாகவும் போராட்டம்

*நேற்றும் கலைக்க முயற்சி; சிலர் காயம்*

கொழும்பு, டிசெ.12

அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது. நேற்று அவர்கள் துறைமுகத்தின் நுழைவாயிலை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தத் துறைமுகத்தில் நீண்ட காலமாகத் தற்காலிகமாகப் பணியாற்றும் 483 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரியே அவர்கள் இந்தப் பணிப் புறக்கணிப்பு, போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நேற்றைய தினமும் அங்கிருந்து விரட்ட முற்பட்ட வேளை அங்கு குழப்பநிலை ஏற்பட்டது. இதனால் சில ஊழியர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனவும் தெரிய வருகின்றது.

நேற்றுமுன்தினம்போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கடற்படையினர் துரத்த முற்பட்ட சம்பவத்தில் காயமடைந்த நான்கு ஊழியர்கள் தொடர்ந்தும் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)

# நல்லூர் பிரதேச செயலக ஒளிவிழா 19 ஆம் திகதி

நல்லூர், டிசெ.12

நல்லூர் பிரதேச செயலக ஒளி விழா நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத் தில் பிரதேச செயலர் ஆ.சிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

இங்கு ஒளிவிழா சிறப்புரையை மானிப்பாய் அந்தோனியார் தேவாலய பங்குத்தந்தை அருட்பணி எஸ்.ஜெ.கியூ. ஜெயரஞ்சன் அடிகளார் நிகழ்த்துவார்.

இவ்விழாவில், சென். பெனடிக்ற் வித்தியாலய மாணவர்கள், கோண்டாவில் நல்ல சமாரியன் தேவாலய சபை, கொக்குவில் கல்வாரி பூரணசுவிசே தேவாலய சபை, மானிப்பாய் புனித அன்னாள் ஆலயம், நல்லூர் நாற்சதுர சுவிசே சபை போன்றவற்றினால் கலை நிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்படவுள்ளன.

(ம-32)

# முல்லைத்தீவு கரைதுறைப்பற்றில் நேற்று மாணவர் கௌரவிப்பும் உதவி வழங்கலும்



முல்லைத்தீவு,டிசெ.12

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாணவாகளுக்கான கௌரவிப்பும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

முள்ளியவளை தமிழ்த் தாய் கல்வி நிலைய வளாகத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் கஷ்ட நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 250 இற்கும் அதிகமான மாணவர் களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வடக்கு மாகாணசபை உறுப்பினர் சிவநேசன், கரை துறைப் பற்று பிரதேச செயலாளர் மற்றும் பலர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

(ம-81)

# பொரளை கனத்தை சுற்றுவட்டத்தில் டட்லியின் சிலை நேற்றுத் திறப்பு



கொழும்பு, டிசெ.12

நாட்டின் பிரதமராக நான்கு தடவைகள் பதவிவகித்த அமரர் டட்லி சேனநாயக்கவின் பெரும் பணிகளைக் கௌரவித்து பொரளை கனத்தை சுற்றுவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட அவரது உருவச்சிலையை திரை நீக்கம் செய்தல் மற்றும் பொரளை கனத்தை சுற்றுவட்டத்தை டட்லி சேனநாயக்கா சுற்றுவட்டம் என பெயரிடும் நிகழ்வு நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

டட்லி சேனநாயக்கா மக்களுக்காக தனது அதிகாரத்தை அர்ப்பணித்த முன்மாதிரியான மனித நேயமிக்க தலைவரென நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி குறிப்பிட்டார்.

1965 ஆண்டில் நாடாளுமன்ற தேர்தலுக்காக அவர் பொலனறுவைக்கு வருகைதந்த போது, பதினான்கு வயதான தான் அவரை முதற்றடவையாகக் கண்டதை ஞாபகப்படுத்திய ஜனாதிபதி, அவரது உருவச் சிலையை இன்று(நேற்று)திரை நீக்கம் செய்துவைக்க வாய்ப்பு கிடைத்தது தனக்கு கிடைத்த பாக்கியம் என வும் குறிப்பிட்டார்.


நாட்டுக்கு சிறப்பான பணியாற்றிய உன்னதமான தலைவர்களின் நற்பண்புகளை போற்றி அவர்களது உருவச்சிலைகளை நிர்மாணிப்பதைப் போன்று அவர்களது வாழ்க்கை முறையை ஆய்வு செய்வதன் மூலம் புதிய அரசியல்வாதிகள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் உள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

"மக்கள் மனங்களை வென்ற தலைவரின் நினைவுக் குறிப்புக்கள் டட்லி சேனநாயக்கா" எனும் நூலும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

ஹுணுபிற்றிய கங்காராம விகாராதிபதி சங்கைக்குரிய கலபொட ஞானீஸர தேரர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, ருக்மன் சேனநாயக்க, வசந்த சேனநாயக்க மற்றும் மக்கள் பிரதிநிதிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(இ)

## முல்லை. வட்டுவாகலில் 105 வயது முதியவர் காலமானார்



முல்லைத்தீவு வட்டுவாகலில் வசித்த 105 வயது முதியவர் ஒருவர் நேற்று உயிரிழந்தார். சிங்காரப்பிள்ளை சுப்பிரமணியம் என்பவரே உயிரிழந்தவராவார்.

அண்மையில் வட்டுவாகலில் நடத்தப்பட்ட நிகழ்வொன்றில், வட்டுவாகல் சப்தகன்னிமார் இளைஞர் ஒன்றியத்தினால் இவருக்கு பாராட்டு விழா நடத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(ம-81)

# ஊழல் குற்றவாளி ஒருவருக்கு உயர் பதவி வழங்க முயற்சி

*இராஜாங்க அமைச்சர் ரங்கேபண்டார போர்க்கொடி*

கொழும்பு, டிசெ.12

தேசிய தொழிற்பயிற்சி அமைச்சின் பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையைக்குறிக்கும்நைட்டா நிறுவனத்திற்கு ஊழல் குற்றச்சாட்டுள்ள ஒருவரை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தொழிற்பயிற்சி இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

இவ்வாறான குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவரை இப்படியான பொறுப்பு வாய்ந்த ஒரு பதவிக்கு எவ்வாறு நியமிக்க முடியும் எனவும் இராஜாங்க அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் இருக்கின்ற நிலையில் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு இடமளிக்க முடியாது எனவும் அவர் கூறியுள்ளார். (ம)

*வவுனியா நடு வீதியில் அமர்ந்திருந்த நிலையில்*

# பொலிஸாரால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண் தப்பியோட்டம்

வவுனியா,டிசெ.12

பொலிஸாரால் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க் கப்பட்ட பெண்ணொருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை வைத்தியசாலையில் இருந்து தப்பியோடியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஏ9 வீதியை மறித்து போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியதுடன் பொலிஸாரின் விசாரணைகளுக்கு ஒத்துழைக்க மறுத்த பெண்ணை பொலிஸார் வெள்ளிக்கிழமை மாலை வவுனியா வைத்தியசாலையில் சேர்த் தனர். அந்தப் பெண் ணுக்கு மருத்துவ அறிக்கை பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே அவர் தப்பிச் சென்றுள்ளார்.

வைத்தியசாலையில் உள்ள பொலிஸாரின் காவலில் இருந்த இந்தப் பெண் எவ்வாறு தப்பிச் சென்றார் என்பது தொடர்பாக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-100)

காணி தேவை

K.K.S, பலாலி, வசாவிளான், ஒட்டகபுலம், குரும்பசிட்டி போன்ற இடங்களில் 25 – 100 பரப்பு காணி தேவை.

தொடர்பு:- 077 4801734

(R/003)

# காணாமற்போனவர்கள் தொடர்பில் நீதியான பதில் எட்டப்பட வேண்டும்

## மட்டக்களப்பு அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையத் தலைவர் கோரிக்கை

கொழும்பு, டிசெ.12

ஜெனீவா உடன்படிக்கையை அரசு இழுத்தடிப்புக்கள் செய்யாமல் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். காணாமற் போனவர்கள் தொடர்பில் நீதியான பதில் எட்டப்பட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் ஒன்றியம் இணையத்தின் தலைவர் எஸ்.சிவயோகநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

மனித உரிமை தினமான நேற்று முன்தினம் மட்டக்களப்பில் மாபெரும் பேரணி ஒன்று நடைபெற்றது. இதன்போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி இன்றும் எட்டாக் கனியாகவே இருக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டிய சட்ட மூலம் சிவில் அமைப்புக்களிடமும் ஆலோசனைகளைப் பெற்று ஆக்கப்படுவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தன. இதற்கான அலுவலகம் கொழும்பில் அமையவுள்ளதாகஎமக்குதகவல்கள் வந்த வண்ணமுள்ளன.

இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மாவட்ட ரீதியாக பிரதேச ரீதியாக காணாமலாக்கப்பட்டோர் குறித்த அலுவலகங்கள் திறக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்குரிய உரிமைகளைப் பெறுவதற்கு உறுதுணையாக அமையும்.

நிலைமாறு கால நீதியூடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்குதல் போன்ற விடயங்கள் இன்னும் எட்டாக்கனியாகவே இருக்கின்றன.

இதனை அரசு மிகவிரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும். நாட்டில் மனித உரிமைகள் நிலை நாட்ட வேண்டும்.

இருக்கின்ற சட்டங்களுக்கு ஊடாக சட்டம் ஒழுங்கு, நாட்டின் இறையாண்மை, தேசியம், உள்ளிட்ட அனைத்தையும் பாதுகாக்க முடியும் என்பதை நாம் தெளிவாககூறிக்கொள்ளவிரும்புகின்றோம்.-என்றார். (ஐ)

## 'இருளுள் இதயபூமி' ஆவணப்படம் இன்று கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.12

முல்லைத்தீவு மணலாறு எல்லைக் கிராமங்கள் பற்றிய உண்மையை வெளிக் கொணரும் வகையில் யாழ்.ஊடக அமையத்தால் தயாரிக்கப்பட்ட 'இருளுள் இதயபூமி' எனும் ஆவணப்படம் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூக தலைவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று திங்கள் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் றக்கா வீதியில்அமைந்துள்ள கலைத்தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலச் சுவீகரிப்புத் தொடர்பான பல்வேறு அம்சங்கள், உண்மைகள் இந்த ஆவணப் படத்தில் இடம் பிடித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# போதைப் பொருளுடன் வரும் 8 கப்பல்கள்; சுற்றிவளைக்கத் தயாராகின்றது பொலிஸ்!

## புலனாய்வுத் தகவல் வலையமைப்பின் ஊடாகத் தகவல்கள் கிடைத்துள்ளனவாம்

கொழும்பு, டிசெ.12

போதைப் பொருள் அடங்கிய 8 கப்பல்களை சுற்றி வளைக்கும் திட்டம் ஒன்றை இலங்கை பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு ஆரம்பித்துள்ளது.

தெற்காசியாவில் கைப்பற்றப்பட்ட அதிக பெறுமதியான போதைப் பொருளை கண்டுபிடித்த இலங்கை பொலிஸ் போதை தடுப்பு பிரிவினரே இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

போதைப்பொருள் தடுப்பு பிரிவால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பெரியளவான புலனாய்வு தகவல் வலையமைப்பின் ஊடாகக் கிடைத்துள்ள தகவல்களுக்கமைய தேடுதல் நடவடிக்கை தீவிரமடைந்துள்ளது.

இதற்கமைய கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை ஊடாக இந்தியாவுக்கு கொண்டு செலப்பட்ட ஆயிரத்து 200 கோடி ரூபா பெறுமதியான கொக்கைன் தொகை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த போதைப்பொருள் கொண்டு செல்லப்பட்ட கப்பல் ஈக்குவடோர் மற்றும் சவுதி அரேபியாவில் இருந்து புறப்பட்ட சந்தர்ப்பத்தில் 600 கொள்கலன்கள் காணப்பட்டுள்ளன. அதில் கொக்கைனுடனான கொள்கலன் தொடர்பிலான தகவல்களை புலனாய்வு பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

போதைப் பொருளுக்கு முற்றுப்புள்ளி என்றும்வேலைத் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் கீழ் பொலிஸ் திணைக்களத்தின் மற்றைய பாதுகாப்பு பிரிவுகளின்ஆதரவுக்குஅமைய இந்த விசேட புலனாய்வு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

அந்த புலனாய்வு பிரிவு இலங்கையில் மாத்திரமின்றி சர்வதேச போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளது.

இந்த நிலையில் முடிவாக இந்தக்கொக்கைன்தொகையை கண்டுபிடித்துள்ளது.

போதைப் பொருள் தடுப்பு பிரிவு 2013 ஆம் ஆண்டில் இருந்து இதுவரையில் ஆயிரத்து 356 கிலோ கொக்கைனை மீட்டுள்ளது.

இந்த நிலையில் அதன் பெறுமதி 20 பில்லியன் ரூபாவாகும்.

இதேவேளை இந்த 800 கிலோ கொக்கைன் போதைப் பொருள் கொண்டுவரப்பட்ட கப்பல் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





சர்வோதய அமைப்பின் நல்லிணக்க வேலைத் திட்டத்தின் கீழ் நல்லிணக்கம் மீதான வடக்கு, கிழக்கு மக்களின் விதந்துரைகள் எதிர்பார்ப்புகள் குறித்த பிரகடனம் வெளியிடும் விசேட நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வோதய அமைப்பின் தலைவர் கலாநிதி ஏ.ரி.ஆரியரட்ணவும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே ஆகியோரும் கலந்து கொண்டனர்.இந்த நிகழ்வில் நல்லிணக்கம் மீதான வடக்கு, கிழக்கு மக்களின் விதந்துரைகள், எதிர்பார்ப்புகள் குறித்த பிரகடனத்தை வடக்கு மாகாண ஆளுநரிடம் சர்வோதய அமைப்பின் தலைவர் வழங்கினார்.

சர்வோதய அமைப்பால் வெளியிடப்பட்ட நல்லிணக்கம் பற்றிய நூலை வடக்கு மாகாண முதலமைச்சரின் பிரதிநிதியாக கலந்து கொண்ட வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பெற்றுக் கொண்டார். (ஐ-19)

# இன்று ஜனாதிபதியைச் சந்திக்கும் 21 முஸ்லிம் எம்.பிகள்

கொழும்பு, டிசெ.12

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21 பேர் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு ஜனாதிபதியைசந்திக்கவுள்ளனர்என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெற்று வந்தமையால் ஜனாதிபதியுடனான முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பு தள்ளிப் போனது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஞானசார தேரருக்கு எதிராக உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21 கையொப்பமிட்ட கடிதம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் மேலும் தெரிவித்துள்ளார்.

ஞானசாரதேரர் தொடர்ச்சியாக இஸ்லாத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டு வரும் நிலையில் இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்று ஊடகவியலாளர்கள் வினவிய போது, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஐ)

யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பத்துறையில் சாதனை படைத்து வரும் விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி

யாழ்ப்பாணத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவு தொழில்நுட்பப் பாடங்களுக்கு சிறப்பாக இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவனமாக விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி இனங்காணப்பட்டுள்ளது. பொறியியல் தொழில்நுட்பம். உயிர் முறைமைகள். தொழில்நுட்பம் பாடங்களுக்கு மிகச்சிறந்த விரிவுரைகளும் செயல்முறை வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(C/096)

# கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை போராட்டம் தொடரும்

## மாஹம்புர துறைமுக சேவையாளர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.12

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரையில் சத்தியாகிரகப் போராட்டம் தொடரும் என்று மாஹம்புர துறைமுக சேவையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் யு.கே ஒமேஸ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரிகள் உரிய பதிலை பெற்றுக்கொடுக்கும் வரையில் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டை, மாஹம்புர துறைமுக பணியாளர்கள் முன்னெடுத்த போராட்டத்தை கலைக்க நேற்றுமுன்தினம்

பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை மேற்கொண்ட போது முறுகல் நிலை ஏற்பட்டது.

இதன்போது மேற்கொண்ட நடவடிக்கையின்போது பலர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு ஏற்பட்ட நஷ்டத்தை போராட்டம்நடத்தியவர்களிடம் இருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று துறைமுக அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 - 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 - 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 - 222 2600

## இறைமையின் அடிப்படையில் சமஷ்டி அதையே வலியுறுத்த வேண்டும்

ஒற்றையாட்சிக்குள் எந்த அரசியல் தீர்வுக்கும் இணங்கவே முடியாது என்ற தமிழர்களின் நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எடுத்துரைத்து விட்டார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

2009 மே மாதத்துக்குப் பின்னர் - அதாவது விடுதலைப்புலிகள் இயக்கத்தின் செயலிழப்புக்குப் பின்னர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தானே தனித்து தன் சுயதீர்மானத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் வழிகாட்டலை முன்னெடுக்கும் நிலைமை வந்தபிறகு - ஒவ்வொரு தேர்தலிலும் அது மக்களிடம் ஒரே விடயத்தைத்தான் முன்வைத்து வாக்குக் கேட்டு வந்தது.

அது- ஐக்கிய இலங்கைக்குள், இணைந்த வடக்கு, கிழக்கில், தமிழர் தாயகத்தின் தனித்துவமான இறைமையின் அடிப்படையில், சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றைக் காணுதல் என்பதே ஆகும். வாசகங்கள், வடிவங்கள் மாறினாலும் இதுதான் கூட்டமைப்பு மக்கள் முன் மீண்டும், மீண்டும் தேர்தல்களில் முன்வைத்த கோஷம். அண்மைக்காலமாக இதனையே தமது மக்களின் ஆணையாக கூட்டமைப்பு பெற்றும் வந்திருக்கின்றது.

தான் மக்களிடம் பெற்ற ஆணையை நிலை நிறுத்துவதில் கூட்டமைப்பு உறுதியாக இருக்குமானால் - வெறும் பேச்சளவு, பத்திரிகை அறிக்கை அறிவிப்பில் மட்டும் என்றில்லாமல் , சொல்லிலும் செயலிலும் அவற்றின் அர்த்தத்திலும் அது உறுதியாக இருக்குமானால் - தமிழர்கள் தரப்பில் அரசியல் சலசலப்புக்கு இடமேயில்லை. கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாகட்டும், சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகட்டும் - ஏன் இந்த இரண்டு தரப்பினரையும் உள்ளடக்கியதான தமிழ் மக்கள் பேரவையாகட்டும்- அவை எல்லாம் அண்மைக் காலத்தில் எழுப்பி வரும் சந்தேகங்களை உற்று நோக்கினால் அவற்றுள் புதைந்து கிடக்கும் விடயம் ஒன்றுதான்.

வாக்குகளைத் திரட்டுவதற்காகத் தேர்தல்களின் போதெல்லாம் தாம்முன்வைத்துவந்த கோஷங்களை - வாக்குச்சுருட்டும் தந்திரத்துக்காக தாம் வழங்கி வந்த உறுதி மொழிகளை எல்லாம் - தமிழ்க் கூட்டமைப்பு கைவிட்டுவிடுமோ என்ற ஐயம்தான் அவற்றுள் இழையோடிக்கிடக்கின்றது.

தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவரான நீதியரசர் விக்னேஸ்வரனின் பிரச்சினையும் கூட அதுதான். 2013 மாகாணசபைத் தேர்தலின் போது அரசியலுக்குள் நுழைந்து, வடக்கு மக்களினால் பெருவாரி வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்ட தலைவர் அவர். அந்த மாகாணசபைத் தேர்தலின் போது தமிழ்க் கூட்டமைப்பு முன்வைத்த விஞ்ஞாபனத்தின் அடிப்படையில்தான் மக்கள் அவருக்கு ஆணை வழங்கினார்கள். அத்தகைய மக்கள் தீர்ப்புக்கு மாறான முடிவுக்குத் தாமும் இணங்கிப் போனார் என்ற அபவாதம் தமக்கு வந்துவிடக் கூடாது என்பதில் அவர் தெளிவாகவும், மிக உறுதியாகவும் இருக்கின்றார். அவரது அண்மைக்கால உரைகளில் இந்த விடயம் மிகத் தெளிவாகப் பொதிந்து கிடப்பதைக் காணலாம்.

'மக்களுக்கு நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை - மக்கள் தமது வாக்குகள் மூலம் எமக்குக் கொடுத்த ஆணையை - நாங்கள் மீறிவிட முடியாது; மீறக் கூடாது'- என்பதை அவர் தமது அண்மைக் காலப் பேச்சுகளின் வரிகளுக்கு இடையில் கோடி காட்டி வருவதைப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

இந்த விடயத்தில் கூட்டமைப்பு தெளிவாகவும், உறுதியாகவும், ஐயத்துக்கு அப்பால் திடசங்கற்பத்துடனும் செயற்படும் என்ற நம்பிக்கை இருந்திருக்குமானால், தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கம் கூட இடம் பெற்றிருக்காது என்று கூறலாம்.

நாம் ஏலவே இப்பத்தியில் சுட்டிக்காட்டியபடி தீர்வுக்கான முயற்சிகள் இப்போது ஒரு தீர்க்கமான ஒரு கட்டத்துக்கு வந்து விட்டன. இனிமேலும் அவை தொடர்பான தமது அரசியல் நிலைப்பாடுகளில் வெற்றுவேட்டு அறிவிப்புக்களை அரசியல் தலைமைகள் வெளியிட்டுக் கொண்டிருக்கக் கூடாது.இப்போது நேரம்வந்துவிட்டது. உறுதியாகவும், வெளிப்படையாகவும் விடயங்களை வெளிப்படுத்தி செயற்படவேண்டிய காலகட்டமும் நெருங்கிவிட்டது.

தமிழ் மக்களுக்குக் கூட்டமைப்பு கொடுத்த வாக்குறுதிகளின் சொல்லாடல்களில் அர்த்தங்கள் நிறைய உள்ளன. 'இணைந்த வடக்கு- கிழக்கு', ' தமிழர் தாயகம்', 'தமிழ்த் தேசத்தின் இறைமை', 'சுயாட்சி','சமஷ்டி', 'ஐக்கிய இலங்கை' போன்ற சொற்றொடர்களுக்குள் நுணுக்கமான அர்த்தங்கள் புதைந்து கிடக்கின்றன. அவற்றுக்கு நுட்பமான விளக்கங்கள் உள்ளன.

'ஒற்றையாட்சி' முறையை ஏற்கமுடியாது. 'சமஷ்டி' அடிப் படையிலான தீர்வே நமது ஒரே நிலைப்பாடு என்று அரசியல் தலைமைகள் கூறும்போது, அங்கு இந்த இரண்டு சொற்களும் தரும் அர்த்தங்கள், விளக்கங்கள் முக்கியமானவையாகின்றன.

பல்வேறு மக்கள் கூட்டத் தொகுதியினரை ஆட்சிமுறை ரீதியாக ஒன்றிணைத்து நிற்கும் ஒற்றையாட்சியோ அல்லது அவ்வவற்றின் தனித்துவங்களை உறுதிப்படுத்தி நிற்கும் சமஷ்டியோ என்பதைத் தீர்மானிப்பதற்கு ஓர் அடிப்படை உள்ளது. அது அந்தந்த மக்கள் கூட்டங்களுக்கு, 'தனித்துவ இறைமை' உள்ளதா என்ற கேள்வியில் இருந்துதான் உருவாகின்றது.

இலங்கைத் தமிழர்கள் ஒற்றையாட்சித் தீர்வுக்கு இணங்க மாட்டார்கள். சமஷ்டியே ஒரே வழி என தமிழர் தலைவர் சம்பந்தன் அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது; மிகப் பொருத்தமானதும் கூட.

ஆனால், இந்த நிலைப்பாட்டைத் தமிழர்கள் எடுப்பதற்கு அடிப் படையாக இருப்பது தங்களுக்குத் தமது தாயகத்தில் தனித்துவமான இறைமை இருக்கின்றது என்று தமிழர் கருது வதுதான். அந்த இறைமை தொடர்பான தமிழர்களின் உரிமைக் குரலையும் சேர்த்து 'தங்களின் தனித்துவ இறைமையின் அடிப் படையில் சமஷ்டித் தீர்வை தமிழர்கள் வலியுறுத்துகின்றார்கள்' என்ற ரீதியில் கூட்டமைப்பு அறிவித்து, அந்தக் கோட்பாட்டில் உறுதியாக நிற்குமானால், சர்ச்சைக்கு இடமில்லை. கூட்டமைப்புக்கு மாற்றாக தமிழர் பக்கத்தில் குரல் எழுப்பும் பல தரப்புகளின் தேவையும் இருப்பும் கூட அர்த்தமற்றதாகிவிடும்.

# தொழிலாளர்களின் உரிமைகளை மீட்க நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள்

## தயாராகிவருகிறது மக்கள் விடுதலை முன்னணி

கொழும்பு, டிசெ.12

விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சகல உழைக்கும் வர்க்கத்தினரையும் எழுச்சியூட்டும் வகையில் நாடளாவிய ரீதியில் பெரியளவில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மக்கள் விடுதலை முன்ணணி இதற்குத் தயாராகி வருகிறது என்று முன்னணியின் தொழிற் சங்க செயற்பாட்டாளரான கே.ரி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது:-

தொழிலாளர்களின் சில உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. நிவாரணங்களும் நீக்கப்பட்டுள்ளன. இவற்றை மீண்டும் பெற்றுக்கொடுக்கும் முகமாகவே நாடளாவிய ரீதியில் பெரியளவில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

விவசாயிகள், மீனவர்கள், தொழில் திணைக்கள ஊழியர்கள் மற்றும் துறைமுக ஊழியர்கள் எனப் பலரது தொழில் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அதேபோன்று பல நிவாரணங்களும் நீக்கப்பட்டுள்ளன. எனவே, அவற்றை மீண்டும் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு.

விவசாயிகளுக்கான உர மானியத்தை அரசு நிறுத்தியுள்ளது. எனவே வாக்குறுதியளித்ததைப்போன்று அவற்றை மீண்டும் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதற்கு அரசு தவறுமானால் சகல தரப்பினரையும் வீதியில் இறக்கிப் போராடத் தயங்க மாட்டோம்.

அதேபோன்று தொழில் திணைக்களத்திலும் துறைமுகத்திலும் காணப்படும் ஊழியர்களது பிணக்குகளும் தீர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதே எமது திட்டம் என்று தெரிவித்தார்.

(ஐ)

# வெளிநாட்டுத் தூதரகங்கள் இந்திய அரசுக்கு கோரிக்கை

## சுற்றுலாப்பயணிகள் பணம் பெறுவதிலுள்ள கட்டுப்பாட்டை தளர்த்துமாறு

டில்லி, டிசெ.12

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பணத் தைப் பெறுவதற்கு இருக்கும் கட்டுப்பாடுகளைத் தளர்த்துமாறு இந்திய அரசிடம் இலங்கை உள்ளிட்ட பல வெளிநாட்டுத் தூதரகங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவாதாவது:-

''இந்தியாவில் 1000 ரூபா, 500 ரூபா நாணயத் தாள்கள் செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ள நிலையில், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

தற்போது இந்திய அரசு அறிவித்துள்ளதன்படி, தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரம் மூலம் நாளொன்றுக்கு அதிகபட்சம் 2500 ரூபா மாத்திரமே மீளப் பெற முடிவதுடன், வெளிநாட்டவர்கள் வாரம் ஒன்றுக்கு கடவுச் சீட்டைக் காண்பித்து 5 ஆயிரம் ரூபாவுக்கு இணையான வெளிநாட்டு நாணயத் தாள்களை மாத்திரமே, மாற்றிக்கொள்ள முடியும்.

இதனால், வந்துள்ள சுற்றுலாப்பயணிகள் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

நாணயத்தாள்கள் செல்லுபடியற்றதாக அறிவிக்கப்பட்ட பின்னர், பணமாற்றும் நடைமுறைகளில் காணப்படும் சிக்கல்களால் தாம் தவிப்பதாக புத்தகாய உள்ளிட்ட இடங்களில் இருந்து எமது நாட்டவர்கள் பலரிடம் இருந்து தொலைபேசி அழைப்புகள் கிடைத்தன.

இதுதொடர்பாக கவனிக்குமாறு இந்திய வெளிவிவகார அமைச்சுக்கு கடிதம் எழுதியுள்ளோம். எம்மால் முடிந்தளவுக்கு எமது நாட்டவர்களுக்கு உதவ முயன்றுள்ளோம் என்று புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரக உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு ஆண்டு தோறும் 3 இலட்சம் இலங்கையர்கள் சுற்றுலா வருகின்றனர். இவர்களில் 2 இலட்சம் பேர் யாத்திரிகர்கள். இலங்கையை விட, ஜப்பான் போன்ற நாடுகளில் இருந்தும், பௌத்த ஆலயங்களுக்கு யாத்திரிகர்கள் அதிகளவில் வருகின்றனர்.

நாணயத்தாள்கள் பெறுமதியற்றதாக்கப்பட்டதால், வெளிநாட்டுப் பயணிகள் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். இந்தியாவில் உள்ள 157 வெளிநாட்டுத் தூதரகப் பணியகங்களின் சார்பில் கருத்து வெளியிட்ட டொமினிக்கன் குடியரசின் இந்தியாவுக்கான தூதுவர் பிராங் ஹான்ஸ் டானென் பேர்க் காஸ்ட்லானொஸ் தெரிவித்ததாவது:-

''இந்திய வெளிவிவகார அமைச்சின் கவனத்துக்கு தாம் இதனைக் கொண்டு சென்றுள்ளேன். தாஜ்மகால் போன்ற, சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் குவியும் முக்கியமான இடங்களில் கடன் அட்டையை ஏற்றுக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளேன்.

சுற்றுலா மையங்களிலும், விடுதிகளிலும் உள்ள தன்னியக்கப் பணப்பரிமாற்று இயந்திரங்களில், சுற்றுலாப் பயணிகள், இலகுவாக பணத்தை எடுக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று, இந்திய வெளி விவகார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளேன்.''- என்றார்.

# சிவனொளிபாதமலை யாத்திரை பருவகாலம் நாளை ஆரம்பம்

கொழும்பு, டிசெ.12

சிவனொளிபாதமலை யாத்திரை பருவகாலம் நாளை பூரணை தினத்துடன் ஆரம்பமாகவுள்ளதாக சிவனொளி பாதமலை நாயக்க தேரர் பெங்கமுவே தம்மதின்ன தெரிவித்துள்ளார்.

இவ்வருடத்துக்கான சிவனொளிபாதமலை யாத்திரைப் பருவக்காலத்தை ஆரம்பிக்கும் முகமாக இரத்தினபுரி, பெல்மதுளை, கல்பொத்தாவெல ரஜ மஹா விகாரையில் வைக்கப்பட்டுள்ள சமன்தேவ விக்கிரமும் பூஜைப்பொருள்களும் தாங்கிய இரத பவனியாக இன்று சுப வேளையில் புறப்பட்டு பெல்மதுளை, இரத்தினபுரி, கிதுல்கல, கினிகத்தேனை, வட்டவளை, ஹற்றன், நோர்வூட், மஸ்கெலியா, நல்லதண்ணி வழியாக சிவனொளி பாதமலையின் அடிவாரத்தை இன்று இரவு வந்தடையும்.

சமன்தேவ விக்கிரகமும் பூஜைப் பொருள்களும் மலை உச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டு பிரதிஷ்டை செய்ததன் பின்னர் நாளை அதிகாலை நடைபெறவுள்ள விசேட பூஜைகளைத் தொடர்ந்து 2016 - 2017 ஆம் வருடத்துக்கான சிவனொளி பாதமலை யாத்திரைப் பருவ காலம் ஆர பிக்கப்படவுள்ளது.

சிவனொளிபாதமலை பருவ கால யாத்திரை காலப பகுதியில் பொலித்தீன், பிளாஸ்டிக் மற்றும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு நுவரெலியா மாவட்டச் செயலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும், யாத்திரிகர்களுக்கு மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கத்தில் நீராடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த யாத்திரிகர்களுக்காக விசேட போக்குவரத்துச் சேவைகளும் முன்னெடுக்கப்படவுள்ளது. மேலும், நல்லதண்ணி பொலிஸார் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடத் தயாராகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

**நாளை**

13.12.2016
செவ்வாய்க்கிழமை
திதி : சதுர்த்தசி முற்பகல் 8.53 வரை
நட்சத்திரம்: ரோகிணி
முன்னிரவு 10.31 வரை
சுபநேரம்: 10.50 - 12.20
இராகுகாலம்: 3.20 - 4.50

# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய புதிய கட்டடம் 23 ஆம் திகதி திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ.12

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் புதிய கட்டடம் எதிர்வரும் 23 ஆம் திகதி திறக்கப்பட உள்ளது.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா ஆண்டு தோறும் இந்திய, இலங்கை பக்தர்கள் இணைந்து கொண்டாடும் விழாவாக இருந்து வருகிறது.

இந்தத் தேவாலயம் மிகவும் பழைமையான கட்டடத்தில் செயற்பட்டு வந்ததால், அதற்கு அருகில் புதிதாக மற்றொரு அந்தோனியார் ஆலயம் கட்டப்பட்டுள்ளது.



இந்த ஆலயத்தின் திறப்பு விழா டிசெம்பர் 7 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா காலமானதைத் தொடர்ந்து திறப்பு விழாதிகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்தச் சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இலங்கை கடற்படை அதிகாரிகள், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சக அதிகாரிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் ஆகியோர் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்குப் பின்னர், டிசெம்பர் 23 ஆம் திகதி புதிய தேவாலயத் திறப்பு விழா இடம்பெறவுள்ளது என்று யாழ்ப்பாணம் மறை மாவட்ட குரு முதல்வர் தெரிவித்துள்ளார். (ஐ)

## பிரதமரின் சுவிஸ் பயணத்தின் பின்னர்

# அமைச்சரவையில் மாற்றம் ஏற்படும்!

கொழும்பு, டிசெ.12

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் சுவிஸ் விஜயத்தின் பின்னர் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படும் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஜனவரி மாதம் சுவிஸுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் பின்னர் அமைச்சரவையில் நிச்சயம் மாற்றம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை மாற்றங்கள் குறித்து அரசின் தலைவர்கள் பல சுற்றுப் பேச்சுகளை நடத்தியுள்ளனர்.

அமைச்சுக்களால் ஆற்றப்பட்டுள்ள சேவைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

ராஜாங்க அமைச்சர்களுக்கு ஏற்பட்டுள்ள பிணக்குகளைத் தீர்ப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது. செயற்றிறனற்ற அமைச்சரவை செயலாளர்களும் நீக்கப்படவுள்ளனர் என்றும் அந்தச் செய்திகள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன. (ஐ)

# ரயில்வே பிரச்சினை குறித்து ஆராய்வு

கொழும்பு, டிசெ.12

ரயில்வே திணைக்களத்தில் காணப்படும் பிரச்சினைகள் சம்பந்தமாக பேச்சு நடத்துவதற்கு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இணக்கம் தெரிவித்துள்ளார் என்று ரயில் சேவை தொழிற்சங்கங்களின் கூட்டு முன்னணி கூறியுள்ளது.

தமது பிரச்சினைகள் குறித்து தொழிற்சங்கங்களுடன் பேச்சு நடத்துவதற்காக அமைச்சர் மறுப்புத் தெரிவித்து வந்தது தொடர்பில் ஜனாதிபதியுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுகளின் போது சுட்டிக்காட்டப்பட்டதாக அதன் செயலாளர் சம்பத் ராஜித கூறினார்.

எவ்வாறாயினும் எதிர்வரும் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ள இந்த பேச்சுகளின் போது ரயில் சேவை தொழிற்சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தெளிவுபடுத்தி நிரந்தர தீர்வொன்றை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# தஜிகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் ஜனாதிபதி இன்று இலங்கை வருகிறார்

கொழும்பு, டிசெ.12

தஜிகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி எமோமாலி ரஹ்மான் இன்று இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகை தரவுள்ளார் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோரை எமோமாலி ரஹ்மான் சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது இலங்கை-தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுகள் இடம்பெறவுள்ளன.

கண்டிக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ள எமோமாலி ரஹ்மான், இலங்கை வர்த்தக சமூகத்தினரையும் சந்திக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சிசிர மெண்டிஸுக்கு எதிராக விசாரணை இடம்பெறாது

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்தன தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.12

இலங்கை புலனாய்வுப் பிரிவின் தலைமை அதிகாரி சிசிர மெண்டிஸுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து விசாரணை செய்யப்படமாட்டாது என்று அரசு தெரிவித்துள்ளது.

சிசிர மெண்டிஸுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகளுக்கு எதிரான குழு வலியுறுத்தியுள்ளது.

இந்த நிலையில் அரசு இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது. சிசிர மெண்டிஸுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அடிப்படை அற்றவை என்பதால் அவரை விசாரணைக்கு உட்படுத்த வேண்டிய தேவையில்லை என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

எனினும் சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபைக் குழுவால் கவலை தரும் சம்பவங்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் குறித்து அரசு ஆராயும் எனவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# பொது மன்னிப்புக் காலத்தில் 1,415 பேர் சட்டப்படி ஓய்வு!

கொழும்பு, டிசெ.12

தற்போது நடைமுறையில் உள்ள பொது மன்னிப்புக் காலத்தில் இதுவரை முப்படைகளைச் சேர்ந்த ஆயிரத்து 415 பேர் சட்டமுறைப்படி ஓய்வு பெற்றுள்ளனர்.

முப்படைகளிலிருந்தும் தப்பிச் சென்றிருந்தோர் சட்டப்படி ஓய்வு பெறுவதற்கான பொது மன்னிப்புக் காலம் டிசெம்பர் முத லாம் திகதி முதல் அரசால் வழங்கப்பட்டது.

அந்த பொது மன்னிப்புக் காலம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்படவுள்ளது.

அதன்படி இதுவரையான கடந்த 11 நாள்களுக்குள் முப்படைகளைச் சேர்ந்த ஆயிரத்து 415 பேர் சட்டமுறைப்படி ஓய்வு பெற்றுள்ளனர். தரைப்படையைச் சேர்ந்த ஆயிரத்து185 பேரும், கடற்படையைச் சேர்ந்த 161 பேரும் விமானப் படையைச் சேர்ந்த 69 பேரும் இவ்வாறு ஓய்வு பெற்றுள்ளனர் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன கூறியுள்ளார்.

இதுதவிர தரைப்படையிலிருந்து சட்டமுறைப்படி ஓய்வு பெறுவதற்காக ஆயிரத்து 492 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்றும் அவர்களில் 307 பேரின் விண்ணப்பங்களில் குழப்ப நிலை இருப்பதால் அவர்களுக்கு சட்டமுறைப்படி ஓய்வு பெறுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். (ஐ)

# இராணுவ சிப்பாய் சடலமாக மீட்பு!

கொழும்பு, டிசெ.12

தியத்தலாவ இராணுவ, ஒளிப்பதிவு செய்யும் சிப்பாய் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு குறித்த சிப்பாய் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்றும் மஹியங்கனை, மாபாகட வேவ, ஊவதிஸ்ஸபுர பிரதேசத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு மீட்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கடலுக்குச் செல்லும் மீனவர்கள் கட்டாயம் உயிர் பாதுகாப்பு அங்கி அணிய வேண்டும்

## அனர்த்த முகாமைத்துவத் திணைக்களம் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம் ,டிசெ.12

கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் கட்டாயம் உயிர் பாதுகாப்பு அங்கியை அணிய வேண்டும் என அனர்த்த முகாமைத்துவத் திணைக்களம் மீன வர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

குருநகர் பகுதியில் கடற்றொழிலுக்குச் செல்பவர்களுக்கான விழிப்புணர்வு கலந்துரையாடல் ஒன்று வெள்ளிக்கிழமை குருநகர் கலாசார மையத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவத் திணைக்களமும் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களமும் இணைந்து இந்தக் கலந்துரையாடலை நடத்தின.

கடந்த வாரம் ஏற்பட்ட சூறாவளியின் போது குருநகர் கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் உயிரிழந்தனர். கடற்றொழிலுக்குச் செல்பவர்கள் உயிர் பாதுகாப்பு அங்கிகளை பயன்படுத்தினால் இவ்வாறான மரணங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்று அறிவுறுத்தப்பட்டது.

புயல், கடும் மழை என்று அறிவிப்புக்கள் வெளியாகும் சந்தர்ப்பங்களில் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்வதன் மூலம் ஆபத்துக்களைக் குறைக்க முடியும்.

இதேவேளை, மீன்பிடிக்கச் சென்று காணாமற் போனவர்கள் மற்றும் உயிரிழந்தவர்கள் குறித்து உடனடியாகப் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்குமாறும் வலியுறுத்தப்பட்டது.

மீன்பிடிப் படகுகளை வைத்திருக்கும் மீனவர்கள் யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன், மீன்பிடிக்கச் சென்று உயிரிழப்பவர்களுக்கான இழப்பீடுகளை அரசிடம் இருந்து பெற முடியும். மீனவக் குடும்பங்கள் கடற்றொழில் திணைக்களத்தின் ஊடாக இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பொ.தயானந்தா, யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ச.ரவி, யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் பா.ரமேஸ், பொலிஸ் மற்றும் கடற்படை அதிகாரிகள், மீனவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம)

# கிழக்கில் வெவ்வேறு பகுதிகளில் கடல் பெருக்கு: மக்கள் பதற்றம்!





கல்முனைப் பகுதியில் கடல் நீர் திடீரென ஊருக்குள் புகுந்ததால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பும் பதற்றமும் தோன்றியுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணியளவில் கடல் நீர் ஊருக்குள் புகுந்துள்ளது.

பெரியநீலாவணை, பாண்டிருப்பு, கல்முனை சுனாமி நினைவுத் தூபி போன்ற இடங்களில் கடற்கரையிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரம்வரை கடல் நீர் குடிமனைப் பகுதிக்குள் புகுந்துள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

குடிமனைப் பகுதிக்குள் வந்த கடல் நீர் இன்னும் திரும்பிச் செல்லவில்லை என்பதால் அப்பகுதியில் பதற்றம் நிலவுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு நாவலடிக் கடல் பிரதேசத்திலும் நேற்று முன்தினம் சனிக்கிழமை கிராமத்தை நோக்கி கடல் நீர் சிறிதளவு உட்புகுந்தது. இதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. அப்பகுதியில் இருந்த மக்கள் சிலர் மட்டக்களப்பு நகர்ப்பகுதிக்குச் சென்றுவிட்டனர் என்று அப்பகுதிவாழ் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (ச)

## தோணி கவிழ்ந்ததில் இளைஞர் சாவு



மட்டக்களப்பு,டிசெ.12

மட்டக்களப்புமாவட்டத்தில் தோணி கவிழ்ந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீரசிங்கம் சதீஸ் (வயது 24) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

களுவாஞ்சிக்குடி குறுமண்வெளி - மண்டூர் வாவியில் நேற்றுமுன்தினம்சனிக்கிழமை பிற்பகல் மீன் பிடிக்கச் சென்ற இந்த இளைஞனின் தோணியின் தடுப்புக் கம்பு உடைந்து தோணி கவிழ்ந்துள்ளது.

இதன்போது வாவியில் மூழ்கி இளைஞன் உயிரிழந்துள்ளார்.இளைஞனின் சடலம் இரவு வாவியில் இருந்து மீட்கப்பட்டது என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நல்லெண்ண அடிப்படையிலேயே ஒத்துழைப்பு; ஐ.நா. தீர்மானத்தை நாம் மறந்துவிடவில்லை

### ஆதரவாளர்களுக்குத் தெளிவுபடுத்துகிறார் யோகேஸ்வரன் எம்.பி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு நல்லிணக்க அடிப்படையில் ஒத்துழைப்பு வழங்கினாலும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு மாறாக ஒருபோதும் நடந்து கொள்ளாது. இந்த விடயத்தில் எமது தலைமை உறுதியுடன் இருக்கிறது. இதில் தமிழ் மக்கள் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. மக்களின் அபிலாசைக்கு மாறாக எப்போதும் செயற்படமாட்டோம்.

-இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்சீனித்தம்பியோகேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்தமை தொடர்பில் ஆதரவாளர்களை தெளிவுபடுத்தும் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு அலுவலகத்தில் நடைபெற்றது .இங்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது அரசு மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்திருந்தார்கள். அந்த நம்பிக்கையை எமது தலைமை பாதுகாத்து வருகிறது. இதனால் எமது கட்சித் தலைமை பல்வேறு விமர்சனங்களை எதிர்கொள்கிறது.

போர்க்குற்றம் தொடர்பான விசாரணையில் உண்மை கண்டறியப்பட வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அரசாங்கம் இதிலிருந்து தப்பிவிட முடியாது. இதுதொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக உள்ளது.

தற்போதைய அரசாங்கத்திலும் கடும்போக்கு அரசியல்வாதிகள் இருக்கிறார்கள். குறிப்பாக தமிழர் தாயகத்தில் புத்தர் சிலை விவகாரம், பௌத்த பிக்கு சிலரின் அடாவடித்தனங்கள் தொடர்பாக நான் நாடாளுமன்றத்தில் குரலெழுப்பியவேளைநீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கடும்போக்கான கருத்துக்களை வெளியிட்டார்.

'தமிழ் மக்கள் கொழும்பில் இந்துக்கோவில் கட்ட முடியுமானால் வடக்கு, கிழக்கில் ஏன் விகாரை கட்ட முடியாது 'என்று சிங்கள கடும்போக்கு அரசியல்வாதிகள் கருத்துவெளியிடுகிறார்கள். சிங்கள மக்கள் குடியிருக்கும் பகுதியில் விகாரை அமைப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை. சிங்கள மக்கள் இல்லாத இடங்களில் திட்டமிட்டரீதியில் விகாரை அமைப்பது மற்றும் பௌத்த சிலை வைக்கப்படும் நடவடிக்கைகளுக்கே எதிர்ப்பு தெரிவிக்கிறோம். கொழும்பில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் இந்துக்கோவில்கள் இருக்கின்றன. இந்துக்கள் இல்லாத இடங்களில் புதிதாக கோவில்கள் கட்டவில்லை.-என்றார். (ச)

# வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் விபத்துக்களால் 12 உயிரிழப்புக்கள்

### இந்த வருட புள்ளி விவரம் தகவல்




வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் இவ்வருடம் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

-இவ்வாறு வாழைச்சேனை பொலிஸ்நிலையபோக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி ஏ.பி.அர் ஜூன ரத்னாயக்க தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸாரின் ஏற்பாட்டில் விஷேட பாதுகாப்புவாரத்தை முன்னிட்டு 'பாதுகாப்பாக சென்று வருவோம்' என்ற தொனிப் பொருளில் விழிப்புணர்வு ஊர்வலமும் கருத்தரங்கும் இடம் பெற்றன. கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் வீதி விபத்து காரணமாக நாளொன்றுக்கு ஏழு பேர் அண்ணளவாக உயிரிழக்கின்றனர். ஒரு வருடத்துக்கு 37ஆயிரத்துக்கு மேல் வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன. ஒரு நாளைக்கு 110 க்கு மேல் வீதி விபத்துக்கள் இடம் பெறுகின்றன. ஒரு வருடத்தில் மோசமான விபத்துக்கள் 5ஆயிரத்துக்கு மேல் இடம்பெறுகின்றன.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் 2015ஆம் ஆண்டில் 145விபத்துக்கள்இடம்பெற்றுள்ளன.இவ்வருடம் 80விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த வருடத்தை விட இவ் வருடம் விபத்துக்கள் குறைவடைந்துள்ளன. -என்றார். (ச)

# துறைநீலாவணைப் பகுதிக்கு இறப்பு,பிறப்புப் பதிவாளர் தேவை

### விரைவில் நியமிக்குமாறு பதிவாளர் நாயகத்துக்குக் கடிதம்

துறை நீலாவணை டிசெ.11

மட்டக்களப்புமாவட்டத்தின் மண்முனை தென் எருவில் பற்றுபிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்ட துறை நீலாவணைக் கிராமத்துக்குக்காலம்தாழ்த்தாது விவாக, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதிக்கான பிரதம அமைப்பாளரும், முன்னாள் பிரதி அமைச்சருமான சோ. கணேசமூர்த்தி இலங்கைப் பதிவாளர் நாயகம் ஈ.எம். குணசேகரவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசரக்கடிதத்தில் இவ்வாறு கேட்டுள்ளார். அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

சுமார் ஆயிரத்து 850 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரம் பொதுமக்கள் வாழும் துறைநீலாவணைக்கிராமத்தில் விவாக,பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் வெற்றிடம் நான்கு வருடங்களுக்கும் மேலாக இருந்து வருகின்றது. இது கவலையளிக்கும்விடயமாகும்.

தங்களது திணைக்களம் 2014.04.11 ஆம்திகதி வெளியான இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி பத்திரிகையின் மூலம் துறை நீலாவணைக்கான விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்கு விண்ணப்பம்கோரி, இரண்டு மாதங்களின் பின்னர் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேர்முகப் பரீட்சை நடத்தியிருந்தது. பின்னர் இந்தப் பரீட்சை ரத்துச் செய்யப்பட்டது.

மீண்டும் வர்த்தமானி பத்திரிகை மூலம் 2015.07.04 ஆம்திகதி இப்பதவிக்கு விண்ணப்பம் கோரி, 2016. 06.09 ஆம்திகதி நேர்முகப் பரீட்சை நடத்தி 6 மாதங்கள் உருண்டோடிவிட்டன.

ஏன் இதுவரை இப்பதவி வெற்றிடம் நிரப்பப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது.

எனவே இம்மக்களின் தேவையைக்காலம்தாழ்த்தாது, பூர்த்தி செய்ய வேண்டும்.- என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ - 151)

# விபத்தில் இளைஞர் படுகாயம்



அம்பாறை,டிசெ.12

கல்முனையிலிருந்து ஏறாவூரை நோக்கிச் சென்று கொண்டிருந்த கன்டர் ரக வாகனம் ஒன்று செட்டிபாளையம் எனும் இடத்தில் விபத்துக்குள்ளானதில் ஒருவர்படுகாயமடைந்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் ஏறாவூரைச் சேர்ந்த முகமட் ஷஜான்(வயது27) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

காயமடைந்த இளைஞர் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுபின்னர்மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

செட்டிபாளையம் முருகன் ஆலயத்துக்கு அருகில் ,கோழி ஏற்றிச் சென்ற இந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்ததனாலேயே விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# வடக்கு, கிழக்குக்கான நிதி ஒதுக்கீடு; கூட்டமைப்புடன் ஆலோசிக்கவில்லை

## 'பட்ஜெட்' குறித்து மாவை குற்றச்சாட்டு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கலந்தாலோசித்து மக்களின் தேவைகளை அறிந்து ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் நிதியை ஒதுக்குவதற்கு 2017 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா குற்றம் சுமத்தியுள்ளார்.

2017 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் நிதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சேனாதிராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில்:-

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கட்டியெழுப்புவதற்கும், அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும் உதவி செய்வோம் எனப் பிரதமர் தெரிவித்திருந்தார்.

நாங்கள் அமைச்சரவையில் அங்கம் வகிப்பவர்கள் அல்ல. அதுவல்ல எங்களுடைய நோக்கம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் மற்றும் வடக்கு மாகாண சபை, கிழக்கு மாகாண சபைகளுடனும் ஒன்றிணைந்த வேலைத்திட்டத்தை முன்வைத்து நிதி ஒதுக்கீடு தொடர்பில் பேச வேண்டும் என நாம் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

முக்கியமாக நாங்கள் புதிய அரசமைப்பை முன்மொழிய இருக்கின்ற நேரத்தில், நீங்கள் பல நலத்திட்டங்களை அறிவித்திருக்கின்றீர்கள், குறித்த நலத்திட்டத்திலே, நிதிஒதுக்கீட்டிலே, வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் உட்பட அந்தந்த மாகாண ஆணைக் குழுவின் தேவைகளையும் முன்மொழிவுகளையும் கருத்திற்கொண்டு நிதியை ஒதுக்குவதில் ஒரு நடைமுறை இருக்கின்றது.

போரினால் அழிந்த பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்குகின்ற அதிகாரத்தை, இப்பொழுதும் ஒவ்வொரு அமைச்சரும் விரும்பியவாறு செயற்படுத்துவ்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.-என்றார். (ம)

## ஊழல் மோசடியாளர் தண்டிக்கப்படவேண்டும்

### உலபனே சுமங்கல தேரர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.12

ஊழல், மோசடிகளுடன் தொடர்புடையவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று ஊழல் எதிர்ப்பு முன்னணி அமைப் பின் தலைவர் உலபனே சுமங்கல தேரர் தெரிவித் துள்ளார்.

சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு அந்த அமைப்பால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஊழல், மோசடியில் ஈடுபட்டுள்ளவர்கள் நாட்டில் சுதந்திரமாக திரிகின்றனர்.

இவர்களுக்கு உயர் பதவிகள் வழங்கப்படுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, ஊழல், மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க விசேட நீதிமன்ற பொறிமுறை ஒன்றை நிறுவ வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்றும் உலபனே சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார். (ஐ)

## மலேரியா பரவலை தடுக்க அனைவரும் ஒத்துழையுங்கள்

### வைத்திய அதிகாரி ஜெயக்குமார் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.12

மலேரியா நோயிலிருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறுதிணைக்களங்களின் தலைவர்களையும் மற்றும் உத்தியோகத்தர்களையும் கோரியுள்ளார் பிராந்திய மலேரியா தடுப்பு வைத்திய அதிகாரி கலாநிதி ஆ.ஜெயக்குமார்.

இந்தியாவுக்குப் பயணஞ் செய்யும் ஐயப்பன் அடியார்கள் மற்றும் பொதுமக்கள் முன் கூட்டியே மலேரியாத் தடுப்பு மாத்திரைகளைப் பாவிக்க வேண்டும்.

மலேரியா நோய் சம்பந்தமான கலந்துரையாடல் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பிராந்திய மலேரியா வைத்திய அதிகாரி கலாநிதி ஆ.ஜெயக்குமார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரி.நந்தகுமார் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வைத்திய அதிகாரி கலாநிதி ஆ.ஜெயக்குமார் இந்நோய் சம் பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு கூறினார். மலேரியா நோய் இல்லாத நாடாக இலங்கை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையைத் தொடர்ந்து தக்க வைப்பதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இங்கு நுளம்புகள் இருக்கும் போதும் மலேரியா நோயாளிகள் இல்லை. இந்த நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்குச் சென்று வருபவர்கள் மூலமே இந்நோய் இங்கு பரவும் சூழ்நிலை ஏற்படுகின்றது.

எனவே இந்தியாவுக்கு செல்லவிருக்கும் ஐயப்பன் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் முற்கூட்டியே தடுப்பு மாத்திரைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று மேலும் கூறினார். (ஐ-59)

## பொலிஸ் மா அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

### அரசமைப்பு பேரவை ஜனாதிபதியிடம் முன்வைப்பு

கொழும்பு, டிசெ.12

பொலிஸ் மா அதிபர் பூஜித்த ஜயசுந்த ரவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அரசமைப்பு பேரவை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஊழல் விசாரணைகளின் போது சந்தேகநபரை பாதுகாப்பதற்கு பொலிஸ் மா அதிபர் முயற்சிக்கிறார் என்று முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்ற அரசமைப்பு பேரவையின் நீண்ட கலந்துரையாடலைத் தொடர்ந்து ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக்கால நகர்வுகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அரசமைப்பு பேரவை எடுத்துரைத்துள்ளது. அத்துடன் பொலிஸ் மா அதிபரின் செயற்பாடுகள் குறித்து தமது கடும் அதிருப்தியையும் அரசமைப்பு பேரவை வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் பொலிஸ் மா அதிபருக்கு இதற்கு முன்னர் எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளதையும் ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் அரசமைப்பு பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## இலங்கைக்கு சீனா சிறந்த நண்பன்

### ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.12

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு நாளுக்கு நாள் பலமடைந்து வருகிறது என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சீன மருத்துவர்களால் நாகொட மருத்துவமனையில் 500 பேருக்கு கண் சத்திரசிகிச்சையை மேற்கொள்ளும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையின் அபிவிருத்திக்குச் சீனா ஏற்கனவே குறிப்பிடத்தக்க உதவிகளை வழங்கியுள்ளது.

பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபம், உயர்நீதிமன்ற வளாகம், மத்தல விமான நிலையம், அம்பாந்தோட்டைத் துறைமுகம், நெடுஞ்சாலைகள் என்று பல்வேறு உதவித் திட்டங்களை சீனா மேற் கொண்டுள்ளது. கொழும்பு தேசிய மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவு, மருந்து தரச் சோதனைக்கான ஆய்வகம், பொலனறுவையில் சிறுநீரக மருத்துவமனை ஆகியவற்றை சீன அரசு கட்டித்தரவுள்ளது.

1.5 பில்லியன் டொலர் பெறுமதியில் துறைமுக நகரைக் கட்டும் பணியிலும் சீனா ஈடுபட்டுள்ளது. இது சீனாவிடம் இருந்து கிடைத்துள்ள மற்றொரு குறிப்பிடத்தக்க பங்களிப்பு.

இலங்கைக்கு சீனா ஒரு சிறப்பு வாய்ந்த நண்பன். புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர் இரண்டு நாடுகளுக்கும் இடையில் சின்னச் சின்ன விவகாரங்கள் இருந்தன. ஆனால், இப்போது எல்லாப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விட்டன. இரண்டு நாடுகளும் நெருங்கிய நட்பு நாடுகளாக இருக்கின்றன. - என்று தெரிவித்தார். (ஐ)

## யானை, சிறுத்தை இறந்த நிலையில் மீட்பு

கொழும்பு, டிசெ.12

பொலனறுவை தேசிய பூங்காவில் யானை ஒன்று இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வனவிலங்கு அதிகாரிகளால் யானையின் உடல் மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களுக்கு முன்னரே யானை இறந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நோர்வூட் - கெலென்கன் தேயிலைத் தோட்டத்தில் இறந்த நிலையில் சிறுத்தை ஒன்று நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டது என்று நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுத்தை கொல்லப்பட்டிருக்கக் கூடும் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சிறுத்தை இறந்தமை தொடர்பில் விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ)





# காலநிலை மாற்றங்களால் கிளிநொச்சி மக்கள் அவலம்

## விவசாய நிலங்களை ஆக்கிரமிக்கும் பனிப்பூச்சிகள்

கிளிநொச்சி, டிசெ.12

அதிகரிக்கும் பனிப்பொழிவால் கிளிநொச்சியில் விவசாயிகள் மற்றும் நகர்ப்பகுதி மக்கள் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

மார்கழி மாதம் என்றால் பெரும் மழைகாலம் என்று அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

ஆனால் இயற்கை அன்னை மாற்றம் ஒன்றை தந்துள்ளது. மலை நாடுகளின் இடங்கள் போன்று தற்போது கிளிநொச்சியும் கடும் குளிருடனும் கடுமையான பனிப்பொழிவுடனும் காணப்படுகின்றது.

இதனால், விவசாய நிலங்கள் பூச்சி தாக்கங்களால் பாதிக்கப்படுகின்றன என்று விவசாயிகள் தெரிவிக்கிறாா்கள்.

கிளிநொச்சி நகர் பகுதிகள் மற்றும் விவசாய நிலங்கள் முற்றிலும் பனியால் மூடப்பட்டுள்ளன.



நேற்று அதிகாலை முதல் சுமார் 11 மணிவரையும் கடும் குளிருடன் கூடிய காலநிலை காணப்பட்டது என்று மக்கள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக மக்களின் இயல்வு வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. பனி பொழிவால் விவசாய நிலங்களில் உள்ள பயிர்களில் கிருமிகளின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

பருவமழை இல்லாது போனால் விவசாய நிலங்களில் உள்ள பயிர்கள் அனைத்தும் தண்ணீர் இல்லாமல் கருகி விடும் நிலைக்கு போய்விடும் என்று விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர். (ஐ)

## கிளிநொச்சி பகுதிகளில் இன்று டெங்கு ஒழிப்பு

கிளிநொச்சி,டிசெ.12

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையும், சுகாதாரத் திணைக்களமும் இணைந்து கிளிநொச்சி நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நுளம்பு பெருகும் இடங்களை இல்லாதொழிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளன.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் மாலை 6.30 மணி வரை இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கரைச்சி பிரதேச சபை பணியாளர்களால் சபையின் வாகனம் மூலம் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களில் உள்ள குப்பைகள் அகற்றப்படவுள்ளன.

இதனடிப்படையில் குறிப்பிடப்படும் பிரதேசங்களுக்கு கரைச்சி பிரதேச சபையின் பணியாளர்கள் வாகனத்துடன் வருகை தரவுள்ளனர்.

இச் சந்தா்ப்பத்தில் பொது மக்கள் தங்கள் வீடுகளில் மற்றும் பொது இடங்களில் காணப்படும் நீர் தேங்கி நிற்கும் பொருள்களை பிரதேச சபையின் கழிவகற்றும் வாகனத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச சபையினர் கேட்டுள்ளனர்.

கிளிநொச்சி நகரம்,இரத்தினபுரம்,கனகபுரம், உதயநகர் கிழக்கு, திருநகர், கணேசபுரம், கனகாம்பிகைக்குளம், தொண்டைமான்நகர் போன்ற கிராமசேவகர் பிரிவுகளில் கரைச்சி பிரதேச சபையின் வாகனங்கள் மூலமாக கழிவகற்றும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஐ-70)

## மன்னாரில் பல்வேறு உதவிகள்

மன்னார்,டிசெ.12

வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிரீமூஸ் சிறாய்வா தனது மாகாண சபை பாதீட்டு நிதி ஒதுக்கீட்டின் கீழ் மன்னார் மாவட்டத்தில் பல்வேறு உதவித் திட்டங்களை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியுள்ளார்.

இதற்கு அமைவாக மீனவ கிராமங்களில் ஒன்றான பேசாலை கிராமத்தில் மீன் பிடியில் ஈடுபடும் ஒரு தொகுதி மீனவர்களுக்கு மாகாண சபை உறுப்பினர் 'விடுவலை'த் தொகுதிகளை வழங்கினார்.


குறித்த கிராமத்தில் மீன் வெட்டும் தொழிலாளர்களுக்கு கத்தியும் வழங்கப்பட்டது.

இதேவேளை, காத்தான் குளம் புனித சூசையப்பர் ஆலயத்தின் வளர்ச்சிக்காக ஒரு லட்சம் ரூபா நிதியை பங்குத் தந்தையிடம் காசோலையாகக் கையளித்தார்.

சிறுக்கண்டன் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஒரு தொகுதி தளபாடங்கள் மற்றும் நிழல் பிரதி இயந்திரம் போன்றவற்றையும் வழங்கிமை குறிப்பிடத்தக்கது. (ஐ)







# துணுக்காய் வலய வாரியம் சனியன்று அங்குரார்ப்பணம்

## இலங்கையிலேயே முதல் முறையாக





முல்லைத்தீவு,டிசெ.12

துணுக்காய் வலயக்கல்வி வாரிய அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றது

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர்களான க.சிவநேசன், ப.அரியரத்தினம், முன்னாள் தடகள வீரர் எதிர்வீரசிங்கம், அமைச்சின் செயலாளர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டனர்

இதன்போது துணுக்காய் வலயக் கல்வி வாரிய உறுப்பினர்கள் 26 பேருக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. அவர்கள் ஆளுநர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இங்கு உரை நிகழ்த்திய வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா, இந்த வாரிய உறுப்பினர்கள் உரியமுறையில் இந்த வலயத்தை நடத்திச் செல்ல வேண்டும் இலங்கையிலேயே முதல் முறையாக இங்கு இந்த வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

முன்னாள் தடகள வீரரான எதிர்வீரசிங்கம் உரையாற்றும் போது, அரசியல் ரீதியாக மக்களாக்க சபை உருவாகாவிட்டாலும் உங்களுக்கு கல்வியைப் பொறுத்தவரை ஒரு மக்களாக்க சபையாக மாற்றியுள்ளீர்கள். சரியான தீர்மானங்களை எடுத்து கல்வியை வளர்க்கவேண்டுமெனத் தெரிவித்தார். (ஐ-81)

# சமூகத்தில் அந்தஸ்து உடையோராக மாற்றாற்றலுடையோர் மாற்றப்பட வேண்டும்

மன்னார்,டிசெ.12

மாற்றாற்றல் கொண்டவர்களை நாம் இரக்கத்துடன் அணுகுவதை விட அவர்களை சமூகத்தில் அந்தஸ்து உள்ள பிரஜைகளாக மாற்றி முன்னேற்ற அனைவரும் முன்வர வேண்டும்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜீ.குணசீலன் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச மாற்றாற்றல் கொண்டோர் தினத்தை முன்னிட்டு மன்னார் நகர சபை மண்டபத்தில் மன்னார் மாற்றாற்றல் உள்ளோர் புனர்வாழ்வு சங்கத்தால் சர்வதேச மாற்றாற்றல் கொண்டோர் தினம்



அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

-அவர் தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில் தெரிவித்தவை வருமாறு:-

மாற்றாற்றல் கொண்டவர்கள் தொடர்பில் அவர்களை அணுகும் முறை, அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டிய சமூக உதவித்திட்டங்கள் வடக்கில் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

மாற்றாற்றல் கொண்டவர்களுக்காக பல்வேறு திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டபோதும் அவை நடைமுறையில் இல்லை.

-அவர்களை நாங்கள் இரக்கத்துடன் உற்று நோக்குவதை விட சமூகத்தில் அந்தஸ்து உள்ள பிரஜைகளாக மாற்றி அவர்களின் தேவை களை அவர்களே பூர்த்தி செய்யக் கூடிய வகையில் நாங்கள் அவர்களை மாற்றி அமைக்க வேண்டும்.

அவர்களின் முன்னேற்றத்துக்கான பாதையை நாம் வழிவகுத்துக்கொடுக்க வேண்டும்.

எவ்வித பிரிவுகளும் இன்றி அவர்கள் ஏனையோர் போன்றும் சமஅந்தஸ்துடன் வாழ வேண்டும்.- என்றார்.

மாற்றாற்றல் கொண்ட சிறார் களால் கலை நிகழ்வுகள் நடத்தப்பட்டன. அவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.


குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்ரியன்,வைத்தியர் யூட் பச்சேக், சர்வமதத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-112)

காலைக்கதிர்
Kalaikkathir
திங்கட்கிழமை
12.12.2016







புலோலி தென்மேற்கு கந்த முருகேசனார் மாதிரி முன்பள்ளியின் கலைவிழாவும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றபோது மாணவர்களின் கலை நிகழ்வையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் நந்தகுமார் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (ஐ-40)




தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலரின் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற நடமாடும் சேவையில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். நிகழ்வில் இரு காட்சிகள். (இ-8)




வடக்கு மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரனின் பிரமாண அடிப்படையிலான நன்கொடையில் அமைக்கப்பட்ட அறிவொளி முன்பள்ளி அலுவலகம் அண்மையில் அவரால் திறந்து வைப்பதையும் ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் ஐம்பதாவது வருட நிறைவை முன்னிட்டு அண்மையில் நடைபெற்ற அறிவொளி முன்பள்ளி சிறார்களின் கலைவிழா நிகழ்வின்போது நிலையம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் தொடர்ச்சியாக பணியாற்றி வரும் தற்போதைய தலைவர் தி.க.தம்பிராசாவை பாராட்டி சமூகப்பற்றாளர் ச.பாலசுப்பிரமணியம் பரிசு வழங்கி கௌரவிப்பதையும் காணலாம். (இ)



யாழ். வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தின விழாவும் பாடசலையில் அமைந்துள்ள பிரம்மஸ்ரீ அருணாசல சாஸ்திரிகள் மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் ந.இரவீந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வின் பிரதம விருந்தினராக புளொட் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசாவும், வடலியடைப்பு கிராமசேவை அலுவலர் சா.அருள்ஞானானந்தனும் கலந்து கொண்டனர். ஆரம்ப நிகழ்வாக விருந்தினர்கள் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்து வரப்பட்டபோது எடுக்கப்பட்ட படம் . (ஐ)



ஏழாலை முத்தமிழ் மன்றக் கட்டடத் திருத்த வேலைகளுக்காக வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், தனது குறித்தொதுக்கப்பட்ட மாகாண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாவை வழங்கினார். இதற்கான காசோலை வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனால் அண்மையில் வலி.தெற்கு பிரதேச செயலகத்தில் வைத்து ஏழாலை முத்தமிழ் மன்றத்தினரிடம் கையளிக்கப்ப்ட்டது.

இந்த நிகழ்வில் வலி.தெற்கு பிரதேசசபை முன்னாள் தலைவர் தி.பிரகாஸும் கலந்து கொண்டார். (ஐ)



கரணவாய் கலட்டி சனசமூக நிலையத்தின் அங்கத்தவர்களால் அப்பகுதியில் பற்றைக் காடாகக் கிடந்த வீதிகள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன. (ஐ-40)





மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு பாராபட்சமற்ற சமூகத்தைக் கட்டியெழுப்புவோம் என்னும் தொனிப்பொருளில் வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வில் இளைஞர், யுவதிகள் ஒன்று கூடியுள்ளனர்.

அன்புக்கும், நட்புக்குமான வலையமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ஐ-100)

பொன்.வேணு கிருஷ்ணா

# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 28





அரசியல் எதிரியான சீனாவோடு அதிகம் பொருளாதார இணக்கம் கண்டுவிட்டது தாய்வான். அதை வெகு தாமதமாக இப்போது தாய்வான் உணர்ந்திருக்கிறது. ஆகவே, சீனாவோடு ஒப்பிடும் அளவுக்கு பெரிய நாடாக மட்டுமல்லாமல், பொருளாதார வளர்ச்சியிலும் மேல்நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் இந்தியாவோடு உறவை மேம்படுத்திக் கொள்ள அது விரும்புகிறது. சீனாவில் இருக்கும் தனது மொபைல், கம்பியூட்டர் மற்றும் மின்னனு தொழிற்சாலைகளைப் போல இந்தியாவிலும் தொழிற்சாலைகள் தொடங்கலாமா என்று ஆய்வு செய்து வருகிறது.

தாய்வானில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது. இப்போது தாய்வானில் புதிதாக பதவியேற்றிருக்கும் பசுமைக்கட்சிக்




கும் (Green Party) சீனாவுக்கும் ஏழாம் பொருத்தம் என்பதால் இரு நாடுகளுக்கும் இடையே இப்போது பனிப் போர் தொடங்கியிருக்கிறது. அதனால் சீனாவில் இருந்து தாய்வான் வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை திடீர் என்று பல மடங்கு குறைய ஆரம்பித்திருக்கிறது. இனிமேலும் சீனாவை நம்பினால் வேலைக்கு ஆகாது என்று தாய்வானின் புதிய அரசு கருதுவதும் இந்திய - தாய்வான் பொருளாதார உறவு மேலும் மேம்பட்க் காரணமாக அமைந்துவிட்டது.

இதை முன்கூட்டியே கணித்துத் தான் தாய்வான் ஜனாதிபதியாக சாய் இங் வென் (President Tsai Ing-wen) கடந்த மே மாதம் பதவியேற்றபோது, 'New South Bound Policy' என்ற புதிய கொள்கையை அறிவித்தார். தொழில்நுட்பம், வர்த்தகம், கலாசாரம் ஆகிய மூன்று துறைகளிலும் இந்தியாவுடன் உறவுகளை மேம்படுத்திக் கொள்ளத் தாய்வான் விரும்புவதாக குறிப்பிட்டார்.

இந்தியாவைப் பொறுத்தவரை, இனித் தாய்வான்தான் புதிய தென்கொரியா. சில தசாப்தங்களுக்கு முன்னர் சாம்சங், ஹூண்டாய், எல்.ஜி. போன்ற தென்கொரியாக் கம்பெனிகள் எப்படி இந்தியாவுக்கு வந்தனவோ, அதே போன்ற வேகத்தில் தாய்வானின் எலெக்ட்ரானிக் தாதாக்களான அசூஸ், ஏஸர், ஃபாக்ஸ்கான் போன்ற கம்பெனிகள் இந்தியாவில் தங்களது தொழிலை விரிவுபடுத்த நிறையத் திட்டங்கள் வைத்திருக்கின்றன.

இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில், அமெரிக்காவின் ஆப்பிள் போன்களைக்கூட இன்று தாய்வான் கம்பெனிகள் தான் பெரும் அளவில் தயாரிக்கின்றன. உலகின் எந்த பெரிய மொபைல் போன் கம்பெனியானலும் சரி, தாய்வானுக்கு சென்றால் போதும். அவர்கள் கேட்கும் லோகோவைப் பொறித்து, எத்தனை லட்சம் போனைக் கேட்டாலும் உற்பத்தி செய்துதரத் தாய்வான் கம்பெனிகள் தயார்.

ஆப்பிள் போனுக்கு இணையாக அதே சமயம் ஆப்பிள் போனைவிட



குறைந்த விலையில், ஸ்மார்ட் போன்கள் தயாரித்து உலகம் முழுவதும் விற்பனை செய்யவேண்டும் என்பது தான் தாய்வான் ஸ்மார்ட் போன் கம்பெனிகளின் மிகப் பெரியத் திட்டம். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இந்தியா அந்தக் கம்பெனிகளுக்கு உகந்த நாடாக இருக்கிறது.


காரணம், இப்போது இந்தியாவில் நூறு கோடி மொபைல் போன்கள் இருக்கின்றன. இதில் 22 கோடி மட்டும்தான் ஸ்மார்ட் போன். கூடிய விரைவிலேயே 20 கோடி சாதா போன்களை வைத்திருப்பவர்கள் அதை கைகழுவிவிட்டு ஸ்மார்ட் போனுக்கு மாறுவார்கள் என்று தாய்வான் நிறுவனங்கள் உறுதியாக நம்புகின்றன.

காகிதப் பணத்தை ஒழித்துவிட்டு, கிரெடிட் அட்டைகள் வந்தன. காகிதப் பணத்துக்கு மாற்றாக இப்போது பேடிஎம் போன்று டிஜிட்டல் பணம் வேகமாக புழக்கத்தில் வந்த கொண்டிருக்கிறது. இந்திய அரசின் கொள்கையும் காகிதப் பணத்தின் பயன்பாட்டை வெகுவாகக் குறைப்பதுதான்.


டிஜிட்டல் பணம் புழக்கத்தில் வந்தால் ஒட்டோ கட்டணத்துக்கு ஐம்பது ரூபாய், அறுபது ரூபாய்க்கு கூட ஸ்மார்ட் போனில் இருந்து இன்னொரு ஸ்மார்ட் போனுக்கு பணத்தை அனுப்பிவிட முடியும்.

ஆக, காலம், நேரம், அரசியல் என்று அனைத்தும் தாய்வான் கம்பெனிகள் இந்தியாவில் கிளைகள் பரப்ப இப் போது உகந்ததாக இருக்கிறது.

சீனாவின் அத்தகைய பொருளாதார-வர்த்தகப் பின்னணியும் தாய்வானின் இத்தகைய பொருளாதார-வர்த்தகப் பின்னணியும் மாபெரும் வர்த்தகராக விளங்கி அமெரிக்க ஜனாதிபதியாகும் டொனால்ட் ட்ரம்ப்புக்குத் தேவை என்பது தெளிவாகிறது. ஆனால் கிழக்காசியா தொடர்பான சீனாவின் பாதுகாப்புக் கொள்கையும் அமெரிக்கப் பாதுகாப்புக்கொள்கையும் எங்கே எப்படி சமரசமடையும் என்பதைக் கூறுவது கடினம்.



*இக்கட்டத்தில் ட்ரம்ப் எனும் தீவிர முதலாளிய வலதுசாரியை உருவாக்கிய அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு வரலாற்றை ஒரு பறவைப் பார்வையிலாவது நாம் அறிந்து கொள்வது அவசியம்.*







(கேள்வி தொடரும்...)

# அர்த்தமும் அபத்தமும்




உருவகக்கதைகளாக அல்பேர்ட்கம்யூ நாவல் களைப் படைத்தார். குறியீட்டுப் புனைகதைகள் மூலம் தனது தத்துவக் கருத்துக் களை அழுத்திச்செல்வது அவரது தனித்துவ வித்துவம். கதாபாதிரங்களும் இரத்தமும் சதையுமுள்ள மனிதர்கள் அல்லர். முக மற்றக் கருத்துருவச் சித்திரங்கள்.

அந்நியன் (Stranger) என்ற அவரது முதலாவது நாவல் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. அது ஓர் அபத்த மனிதனின் கதை. வாழ்க்கையில் விரக்தி கொண்டு, தன்னில் வெறுப்புக் கொண்டு, சமூகத்தில் ஓர் அந்நியனாக அலைகின்றான் அந்த இளைஞன். உணர்ச்சிகள் அவனிடம் செத்துப் போயிருந்தன, ஒரு தடவை கடற்கரை ஓரம் ஓர் அரபு மனிதனை அவன் சுட்டுக் கொலை செய்கிறான். எதுவித காரணமுமின்றி, எதுவித நோக்கமுமின்றி, எதுவித உணர்வுமின்றி இந்தக் கொலையைச் செய்துவிடுகிறான். காவல்துறையினர் அவனைக் கைது செய்து விசாரிக்கின்றனர். நடந்ததை ஒப்புக்கொள்கிறான். ஆனால், அந்த அர்த்தமற்ற செயலுக்கு அவனால் விளக்கம் கொடுக்க முடியவில்லை. இதனால் அவன் ஒரு பயங்கரக் கொலைகாரனாகக் காணப்படுகின்றான்.

சிறையில், மரணத்துக்காகக் காத்திருக்கும் போது ஒரு குருவானவர் அவனைச் சந்திக்கின்றார். குருவானவர் அவனை மனம் மாற்ற முனைகிறார். அழியாத ஆன்மா பற்றியும், அடுத்த உலகம் பற்றியும் சொல்கிறார். விசுவாசத்தால் அடுத்த உலகத்தில் விமோசனமுண்டு என்கிறார். அவனுக்கு ஆத்திரம் எழுகிறது. முதற் தடவையாக உணர்ச்சி வெளிப்படுகிறது. அந்த ஆவேச உணர்வுடன் அவனுக்கு ஒரு வெளிச்சம் ஏற்படுகிறது. அந்த வெளிச்சத்தில் சாவு பற்றிய தெளிவு பிறக்கிறது. சாவுடன் மனித வாழ்வு முற்றுப் பெறுகிறது என்ற ஞானோதயம் பிறக்கிறது. அந்த விழிப்புடன் வாழ வேண்டும் என்ற தீவிர ஆசையும் பிறந்து விடுகிறது. தூக்குக் கயிறு அவனுக்காகக் காத்திருக்கும்போது, சாவு கதவைத் தட்டும் போது, அவனுக்கு வாழ்வில் பற்று ஏற்படுகிறது. வாழவேண்டும் என்ற துடிப்பு ஏற்படுகிறது.

சிறையில், மரணத்துக்காகக் காத்திருக்கும் போது ஒரு குருவானவர் அவனைச் சந்திக்கின்றார். குருவானவர் அவனை மனம் மாற்ற முனைகிறார். அழியாத ஆன்மா பற்றியும், அடுத்த உலகம் பற்றியும் சொல்கிறார். விசுவாசத்தால் அடுத்த உலகத்தில் விமோசனமுண்டு என்கிறார். அவனுக்கு ஆத்திரம் எழுகிறது. முதற் தடவையாக உணர்ச்சி வெளிப் படுகிறது. அந்த ஆவேச உணர்வுடன் அவனுக்கு ஒரு வெளிச்சம் ஏற்படுகிறது. அந்த வெளிச் சத்தில் சாவு பற்றிய தெளிவு பிறக்கிறது. சாவுடன் மனித வாழ்வு முற்றுப் பெறுகிறது என்ற ஞானோ தயம் பிறக்கிறது.



கடவுள் இல்லாத ஓர் உலகத்தை சிருஷ்டிக்க முனைந்த நீச்சே, மனித அறங்களும் செத்துவிட்டன எனச் சொல்கிறார். இது தப்பு. இந்தக் கோட்பாடு அராஜகத்துக்கு வழிகோலும். கடவுள் இல்லாத உலகில் மனிதனே அறநெறிகளை வரித்துக்கொள்ள வேண்டும்; அர்த்தத்தைக் காண வேண்டும் என்கிறார் கம்யூ. 1960 ஆம் ஆண்டு ஜனவரி 04 ஆம் திகதி பரிஸில் கார் விபத்தில் சிக்கி, அல்பேர்ட் கம்யூ மரணமடைந்தார். சாவு என்பது வாழ்வின் ஓர் அபத்தமான நிகழ்வு என எழுதி வந்த கம்யூ. அந்த அபத்தமான சாவை இறுதியில் சந்தித்தார்.

சாவு நிஜமானது. அடுத்த உலகமோ ஆதாரமற்றது. இந்த உலகமோ அபத்தமானது. ஆனால், வாழ்வுக்கு அர்த்தமுண்டு. வாழ்க்கையை வாழ்வதில்தான் அந்த அர்த்தமிருக்கிறது. இந்தக் கருத்தையே இந்த நாவலில் அழுத்திச் சொல்கிறார் கம்யூ.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது பிரான்ஸ்நாடு ஜேர்மனியின் ஆதிக்கத்துக்கு உட்படுகிறது. நாசிச ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கிளர்ந்த பிரெஞ்சு தலைமறைவு இயக்கத்தில் இணைந்து கொள்கிறார் கம்யூ. தலைமறைவு இயக்கத்தால் வெளியிடப்பட்ட Combat எனும் பத்திரிகையின் ஆசிரியராகப் பணி புரிந்தார். போரும், சாவும், சிதைவும் அந்நியப் படையெடுப்பும் அதற்கு எதிரான போராட்டமுமாக அவர் பட்டுணர்ந்த அனுபவத்திலிருந்து Plague என்ற உருவக நூலையும், Rebel என்ற தத்துவ நூலையும் எழுதினார்.

கொள்ளை நோய் (Plague) போரையும், சாவையும் குறியீடு செய்கிறது. சாவை எதிர்க்கும் மனிதனின் அர்த்தமற்ற எத்தனிப்பையும் உருவகப்படுத்துகிறது. ஓரான் என்ற அல்ஜீரிய கரையோரப் பட்டினத்தைக் கொள்ளைநோய் திடீரெனத் தாக்குகிறது. பட்டின வாசல்கள் அடைத்து மூடப்படுகின்றன. சாவின் முற்றுகைக்குள் பட்டினம். நோயை எதிர்த்துப் போராட பட்டினவாசிகள் அணிதிரட்டப்படுகின்றனர். மனிதனுக்கும் சாவைப் பரப்பும் எலிகளுக்கும் போராட்டம் நிகழ்கிறது. ஒருவரோடு ஒருவர் தொடர்பற்று, உறவற்று, தனித்திருந்த பாத்திரங்கள் ஒரு பொதுவான பேரழிவில் ஒன்று சேர்கின்றனர். பிரதான பாத்திரமாக ஒரு வைத்தியர், மற்றும் ஒரு பத்திரிகையாளர், ஒரு தீவிரவாதி, ஓர் அதிகாரி என்ற ரீதியில் வேறுபட்ட பார்வையுடைய வேறுபட்ட மனிதர்கள் ஒரு நாசகார சக்தியை எதிர்கொள்கின்றனர். மற்றவர்களை விட வைத்தியர் மிகவும் அவதானமாக நடந்து கொள்கிறார். சாவைத் தடுத்து விட முடியாது; ஒத்திப்போடலாம். தப்பிப் பிழைப்பவர்கள் மீண் டும் சாவைச் சந்தித்துத்தான் ஆக வேண்டு என்ற பிரக்ஞையுடன் பற்றற்றவராகப் பணி புரிகிறார். கொள்ளை நோயைக் கடவுளின் தண்டனையாகக் காண்கிறார் பாதிரியார். அசிங்கமான மனிதனைத் தூய்மைப்படுத்தும் திருக்கூத்தாக சாவு சம்பவிக்கிறது எனப் பிரசங்கம் செய்து வந்த அவரைச் சாவு தீண்டிவிடுகிறது. நாவலில் கதையில்லை. ஒரு நெருக்கடி நிகழ்கிறது. மனிதர்கள் சந்திக்கிறார்கள். வார்த்தைகள் பரிமாறப்படுகின்றன. அவற்றில் எண்ணங்கள் தெறிக்கின்றன. 'கடவுள் இல்லாமல் ஒருவன் புனிதனாக முடியுமா? இதுதான் இன்று என்னை அழுத்தும் முக்கிய பிரச்சினை' என்று ஒரு பாத்திரம் கேட்கிறது. ஆன்மிகமற்ற உலகில் அறம் சாத்தியமா என்ற கேள்வியை எழுப்புகிறார் கம்யூ. இறுதியில் நோய் தடுக்கப்படுகிறது. ஆனால், நோய்க்கிருமிகள் சாகவில்லை. அக் கிருமிகள் மீண்டும் மனிதரைத் தாக்கலாம். இரண்டாம் உலகப் போர் முடிந்துவிட்டது. ஆனால் போருக்குக் காரணமான விஷக் கருத்துக்கள் சாகவில்லை. நாசிசமாகவோ, பாசிசமாகவோ அல்லது வேறு எந்தச் சித்தாந்தமாகவோ அந்தக் கருத்துக் கிரு மிகள் மானிடம் மீது பேரழிவை ஏற்படுத் தலாம். இதுதான் மானிடத்தின் துயரமான இருப்பு நிலையாக இந்த உருவக நாவலில் சித்திரிக்கப்படுகிறது.

கிளர்ச்சிக்காரன் (The Rebel) என்ற கம்யூவின் தத்துவ நூல் அரசியல் உலகத்தை விசாரணை செய்கிறது.

கம்யூ ஒரு சமூக சீர்திருத்தவாதி. அநீதிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வதை அவர் ஆதரித்தார். கற்பனாவாதக் கருத்துக்களாக, சித்தாந்தத்துக்காகப் புரட்சி செய்வதை அவர் எதிர்த்தார். மதங்களையும், சர்வாதிகார அரசியற் சித்தாந்தங்களையும் அவர் கண்டித்தார்.

கடவுள் கோட்பாட்டில் எழுந்த மத நம்பிக்கைகள் ஒன்றோடு ஒன்று முரண்பட்டு மோதுகின்றன. மதத்தின் பெயரால் மனிதன் மனிதனை அழித்துவருகிறான். கலவரங்கள் வெடிக்கின்றன. தெய்வத்தின் பெயரால் யுத்தங்கள் நிகழ்கின்றன. நீண்ட நெடுங்காலமாக மத யுத்தங்களால் இந்தப் பூமியின் மடியில் இரத்த ஆறுகள் ஓடியிருக்கின்றன. நித்தியத்துவம் என்ற கற்பனாவாதக் கருத்துக்காக மானிடம் பிளவுபட்டு மோதித் தன்னையே சிதைத்துக் கொள்கிறது.

அரசியற் கருத்துலகிலும் வன்முறை வெடிக்கிறது. ஒரு கற்பனாவாதக் கருத்துக்காகப் புரட்சி வெடிக்கிறது. கருத்துப் போர் வர்க்கப் போராகி, சமூகப் பிரளையங்கள் நிகழ்கின்றன. சித்தாந்தங்கள் யுத்தங்களில் முடிகின்றன.

கம்யூவின் இந்தத் தத்துவ நூல் மத சித்தாந்தங்களை மட்டுமன்றி, அன்றைய கம்யூனிஸ உலகையும் கடுமையாகச் சாடியது. இதனால் கம்யூனிஸ்ட் தோழர்கள் பலரது நட்பை அவர் இழக்கவேண்டி நேர்ந்தது. நீண்டகால நண்பராக இருந்த சாத்தர் கூட கருத்து முரண்பாட்டால் நட்பை முறித்துக் கொண்டார்.

அநீதிக்கு எதிராக, மனிதன் சுதந்திரம் வேண்டி போராடுவதையும் கிளர்ச்சி செய்வதையும் கம்யூ வரவேற்றார். அவர் குறிப்பிடும் கிளர்ச்சிக்காரன் அநீதிக்கு எதிரான சுதந்திரப் போராளி. அவன் அதர்மத்துக்கு எதிரான தர்மத்தின் தளத்தில் நிற்கின்றான். மற்றவர்களது துன்பம் அவனைத் தீண்டுகிறது. அந்தத் துன்பத்தைக் காணும்போது அவனிடம் விழிப்புணர்வு ஏற்படுகிறது. அந்த விழிப்புணர்வால் துன்பப்படும் மற்றவர்களோடு தன்னை இனம்கண்டுகொள்கிறான். மனித ஆன்மத்துக்குப் பொதுவான ஏதோ ஒன்று, மனித அவலத்தில் பிறக்கும் புலனாகாத ஒன்று, அவனையும் மற்றவர்களையும் ஒன்றிணைத்து விடுகிறது.

அநீதிக்கு எதிராக மக்கள் ஐக்கியப்பட்டு எழுச்சி கொள்வதைக் கிளர்ச்சி என்றும், ஒரு கருத்துக்கு வசப்பட்டு மக்கள் அணி சேர்ந்து எழுவதைப் புரட்சி என்றும் வேறுபடுத்தி, வகைப்படுத்திக் காட்டுகிறார் கம்யூ. முன்னதில் நீதி இருக்கிறது, தர்மம் இருக்கிறது. பின்னதில் உன்னதமானது ஒன்றுமில்லை என்பது அவரது வாதம். மனித சுபீட்சத்துக்காக மனிதன் போராட வேண்டும். அது அர்த்தமுடையது அரூபமான, பூடகமான கருத்துக்களுக்காக மனிதர்கள் போராடுவதும் மடிவதும் அபத்தமானது என்கிறார் கம்யூ.

இந்தத் தத்துவ நூலில் நீச்சேயை அவர் கண்டிக்கிறார். நீச்சேயின் தத்துவார்த்தக் கருத்துக்கள் சர்வாதிகார சித்தாந்தங்களுக்குத் தூபமிட்டிருப்பதாக அவர் குற்றம் சாட்டுகிறார். கடவுள் இல்லாத ஓர் உலகத்தை சிருஷ்டிக்க முனைந்த நீச்சே, மனித அறங்களும் செத்துவிட்டன எனச் சொல்கிறார். இது தப்பு. இந்தக் கோட்பாடு அராஜகத்துக்கு வழிகோலும். கடவுள் இல்லாத உலகில் மனிதனே அறநெறிகளை வரித்துக்கொள்ள வேண்டும்; அர்த்தத்தைக் காண வேண்டும் என்கிறார் கம்யூ.

1960 ஆம் ஆண்டு ஜனவரி 04 ஆம் திகதி பரிஸில் கார் விபத்தில் சிக்கி, அல்பேர்ட் கம்யூ மரணமடைந்தார். சாவு என்பது வாழ்வின் ஓர் அபத்தமான நிகழ்வு என எழுதி வந்த கம்யூ, அந்த அபத்தமான சாவை இறுதியில் சந்தித்தார்.

மானிடத்தின் மனச்சாட்சியை கிள்ளிவிட்ட ஒரு மகத்தான கலைஞர் என நோபல் பரிசு குழு அவரைப் புகழ்ந்துரைத்தமை அவருக்குக் கிடைத்த பொருத்தமான சான்றிதழ்.

● (முற்றும்)

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

# வடக்கு, கிழக்கில் ஸ்திரத்தன்மையை குழப்பும் முயற்சியில் பொதுபலசேனா

## முன்னாள் எம்.பியான கருணாகரன் கூறுகிறார்

மட்டக்களப்பு, டிசெ.12

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் உள்ள ஸ்திரத்தன்மையைக் குழப்பும் முயற்சியில் பொதுபலசேனா போன்ற குழுக்கள் செயற்பட்டு வருகின்றன என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''ஆயுதப் போராட்டம் நடைபெற்று வந்த காலப் பகுதியில் பெருமளவிலான இளைஞர், யுவதிகள் ஆயுதப் போராட்டங்களுக்குள் உள்வாங்கப்பட்டிருந்தனர். போரின் அச்ச சூழ்நிலை இன்று நீங்கியுள்ளது. ஆயுதப் போராட்டமும் இல்லாத காரணத்தால் பெரும்பாலான இளைஞர்கள் வேறு திசைகளை நோக்கிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

வெளி மாவட்டங்களில் இருந்து மதுபான அனுமதிப் பத்திரங்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்குள் கொண்டு வரப்பட்டன. அண்மைக் காலமாக முஸ்லிம் பகுதிகளிலும் போதைப் பொருள் பாவனைகள் அதிகரித்துள்ளன. இவ்வாறான போதைப் பாவனைகளில் இருந்து தமிழ் இளைஞர், யுவதிகளை விடுவிக்க வேண்டுமானால் விளையாட்டுத் துறைக்குள் உள்வாங்க வேண்டும்.

கலாசார விழுமியங்களைப் பாதுகாத்துக் கொள்வதோடு, சமூகச் சீர்கேடுகளிலும் இருந்து தமிழ்ச் சமூகத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.


கடந்த காலத்தில் சிங்களப் பேரிவான அரசுகளின் ஒத்துழைப்புடன் நாட்டில் இடம்பெற்ற கலவரங்களினால் தமிழர்களின் உயிர், உடைமைகள் பறிக்கப்பட்டன. குறிப்பாக 1983 ஆம் ஆண்டு கலவரத்தில் தென்னிலங்கையில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப் பட்டனர். கோடிக் கணக்கான சொத்துகள் சூறையாடப்பட்டன.

அந்த இழப்புகளுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் நஷ்டஈடு வழங்குவதாக உறுதியளித்தார். எனினும் அது வெறும் வாய்ப் பேச்சாகவே இருந்தது.

இதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த காலப் பகுதியில் யாழ்.நூலகம் எரிக்கப்பட்டது.

யாழ். பொது நூலகம் ஐக்கிய தேசியக் கட்சியின் காலப் பகுதியில் எரியூட்டப் பட்டதற்கு பிரதியுபகாரமாக வடக்கு, கிழக்கில் புதிய பொது நூலகங்களை அமைப்பதற்கு பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் . இன்று நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமராகவுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, யாழ். நூலகம் எரிக்கப்பட்டதற்கு நாடாளுமன்றத்தில் மன்னிப்புக் கோரியுள்ளார்.

அவர் மன்னிப்புக் கோருவதுடன் நின்றுவிடாது, அந்த நூலகம் போன்று வடக்கு, கிழக்கில் உள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலும் அதே தரத்தில் நூலகங்களை அமைத்துக் கொடுக்கும் போதே ஐக்கிய தேசியக் கட்சி செய்த அநியாயத்துக்கு ஒரு பிரதியுபகாரமாக அமையும்''- என்றார். (எ)



கொழும்பு, டிசெ.12

கொழும்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 12 வயதுக்குட்பட்ட மாணவர்கள் பங்கு பற்றிய விஞ்ஞானப் போட்டியில் கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை சார்பில் பங்குபற்றிய் மாணவன் செல்வேந்திரன் நிக்சன் Safety and Economi பாதுகாப்புமிக்க சிக்கன அடுப்பை சக மாணவர்களின் கூட்டு முயற்சியுடன் வெற்றி கரமாகத் தயாரித்துக் காட்டி 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். (ஜ-8)

## தினசரி ராசி பலன் 12.12.2016

சுபநேரம் : காலை : 6.15 – 7.15
மாலை : 4.45 – 5.45
ராகு காலம் : 7.30 – 9.00
குளிகன் : 1.30 – 3.00
எமகண்டம் : 10.30 – 12.00

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

கீழ் நோக்கு நாள்

**மேஷம்:** வெற்றி - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து வெற்றி நல்கும்.

**ரிஷபம்:** தனம் - நிகழ்வுகள் அனைத்தும் நிம்மதியாக நிறைவு பெறும்.

**மிதுனம்:** பெருமை - இன்று திடீர் புகழாரம் உங்கள் வாசல் நாடி வரும்.

**கடகம்:** பாசம் - இனிமையானவர்கள் அன்பானவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிம்மம்:** லாபம் - அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும்.

**கன்னி:** முயற்சி - நம்பிக்கையுடன் ஈடுபடும் அனைத்துக் காரியங்களிலும் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்:** தெளிவு - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் ஏடுக்கும் அனைத்துக் காரியத்திலும் தெளிவுடன் செயற்படுவீர்கள்.
சந்திராஷ்டமம் : சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதங்கள்.

**விருச்சிகம்:** யோகம் - அதிஷ்டம் அழையா விருந்தாளிகளாக வீட்டு வாசல் கதவுகளைத் தட்டும் யோகம் கிட்டும்.

**தனுசு:** புகழ் - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து புகழ் கிடைக்கும்.

**மகரம்:** பாராட்டு - உழைப்புக்குத் தகுந்த பாராட்டுக்கள் கிடைக்கும்.

**கும்பம்:** ஜெயம் - நல்முயற்சிகள் சிறக்கும், எடுக்கும் காரியத்தில் கீர்த்தி கிடைக்கும்.

**மீனம்:** உதவி - உங்களுக்கு மற்றவர்களால் உதவியும் உங்களால் மற்றவர்களுக்கு உதவும் எண்ணங்களும் உதயமாகும்.

# டெங்கு தொற்று தீவிரம்; விடுமுறைகள் ரத்து!

கொழும்பு, டிசெ.12

டெங்குத் தொற்று நோய் பரவுதல் காரணமாக நாட்டின் 10 மாவட்டங்களின் சுகாதார சேவையின் 30 மருத்துவ அதிகாரப் பிரிவின் சுகாதார சேவையாளர்களுக்கு விடுமுறைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, குருநாகல், புத்தளம், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை போன்ற பிரதேசங்களில் டெங்கு தொற்றுத் தொடர்பிலான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் விசேட கூட்டம் ஒன்று சுகாதார அமைச்சின் வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றபோதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

தற்போது 48 ஆயிரம் பேர் டெங்கு தொற்றுக்கு இலக்காகியுள்ளதுடன் 77 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் சமாதானப் பொறிமுறை கொலம்பியாவுக்கு பொருத்தம் அல்ல

## கொலம்பிய ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.12

இலங்கையின் சமாதானப் பொறிமுறைகள் கொலம்பியாவுக்கு பொருத்தமுடையவையல்ல என்று தான் எண்ணுவதாக, அந்தநாட்டு ஜனாதிபதி ஜூவான் மெனுவல் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பார்க்கெரில்லா போராளிகளுடன்சமாதான உடன்படிக்கை ஒன்றில் கொலம்பிய ஜனாதிபதி கைச்சாத்திட்டிருந்தார்.

2002ஆம் ஆண்டு இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இடையில், நோர்வேயின் தலையீட்டில் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

இதன்படி, இலங்கையின் சமாதானப் பொறிமுறைமை குறித்து விரிவாக ஆராயப்பட்ட போதிலும், அது கொலம்பியாவுக்குப் பொருத்தமுடையது அல்ல என்று தான் எண்ணுவதாக, ஜூவான் மெனுவல் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த ஆண்டுக்கான நோபல் சமாதான விருதும் கொலம்பிய ஜனாதிபதிக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த விருதை பெற்றுக் கொள்வதற்காக நோர்வே சென்றுள்ள, கொலம்பிய ஜனாதிபதியிடம், நோர்வே ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். மேலும், இலங்கையின் சமாதான முனைப்பு வழிகளை பின்பற்றவில்லை என்றும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார். (எ)

# கூட்டு ஒப்பந்தத்தை ரத்துசெய்யுமாறு ஆரம்பித்தது கையெழுத்து வேட்டை

நுவரெலியா, டிசெ.12

கூட்டு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யக் கோரி ஐம்பதாயிரம் கையொப்பங்களைத் திரட்டும் கையெழுத்து வேட்டை சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



இதன் முதற்கட்டம் நேற்று முன்தினம் நுவரெலியா - இராகலைப் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

திரட்டப்பட இருக்கும் ஐம்பதாயிரம் கையொப்பங்களும் ஜனாதிபதிக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பின் பிராந்தியப் பொறுப்பாளர் எஸ்.மோகன்ராஜ் தலைமையில் மேற்படி கையெழுத்து வேட்டை இடம் பெற்றது. இந்த நடவடிக்கையின் முன்னோடி நடவடிக்கையாக தோட்டங்கள் தோறும் தோட்டத் தொழிலாளர்களின் கையொப்பங் களைத் திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலும், இதனை சர்வதேச தொழில் நிறுவனத்துக்கு அழுத்தமாகக் கொண்டு செல்லும் முகமாகவும், உச்ச நீதிமன்றத்தில் இதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காகவும் இந்தக் கையெழுத்து வேட்டையை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தமிழர் தாயகப் பகுதிகளில் அதிகரிப்பு

## வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.12

தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்னரான காலத்தில் தமிழர் தாயகப் பகுதிகளில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன.

பெண்கள் வன்முறைகள் தொடர்பில் நீதித்துறையில் காணப்படும் இழுத்தடிப்புக்களால் பாதிக்கப்பட்டவர்கள் சட்ட உதவியை பெற முன்வருவதில்லை.

இவ்வாறு வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

''வன்முறையற்ற மகிழ்வான குடும்பம் எனும் தொனிப் பொருளில் குடும்பத்தில் சமத்துவம், சமாதானம் பேணி சமுதாயத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழித்திடும் கருப்பொருளில்



ஐசாக் நிறுவனத்தின் செயற்திட்டம் வெள்ளிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றன. அது வீட்டு வன்முறையாக அல்லது சமூக வன்முறையாக காணப்படுகின்றது. இந்த வன்முறைகள் ஊடாகப் பாதிக்கப்படும் பெண்களுக்கு நீதி கிடைப்பதில்லை.

பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்கள் நீதித்துறையின் இழுத்தடிப்புக்களால் அந்த வன்முறைகளை எதிர்த்துப் போராட முடியாத நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்துக்குப் பின்னர் இந்த வன்முறைகள் மோசமாக அதிகரித்துள்ளன.

விடுதலைப் போராட்டத்தின் தோல்வி அனைத்து இடங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதில் ஒன்றுதான் இந்தப் பெண்கள் மீதான வன்முறையும்.

ஆண்கள் என்றால் முதன்மையானவர்கள் என்றும் பெண்கள் என்றால் இரண்டாம் தரமானவர்கள் எனவும் சிறு பராயத்திலேயே அறிமுகப்படுத்தப்படுகின்றது.

பெண்களுக்கு ஒழுக்கம் கலாசாரம் என்பவற்றைப் போதிக்கும் பெற்றோர் அதனை ஆண்களுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

வீதிகளில் செல்லும் பெண்கள் கூட தற்போது சுதந்திரமாக நடமாட முடியாத நிலை ஒன்று உருவாகி வருகின்றது. வயது வேறுபாடு இன்றியே இந்தச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

பாதிக்கப்பட்ட பெண்கள் முறைப்பாடு செய்வதற்கு பொலிஸ் நிலையம் சென்றாலும் அங்கு பணபலம், அரசியல் செல்வாக்கு கொண்டவர்கள் குற்றச்சாட்டுகளில் இருந்துதப்பித்து விடுகின்றனர்.

இந்தப் பாரபட்ச நிலை மாற்றப்படுவதன் மூலமே பெண்கள் தமக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைகளுக்கு சட்ட உதவியொன்றை பெறுவதற்கு முன்வருவார்கள். சமூக ரீதியாக பெண்கள் முன்னுக்கு வர வேண்டும். இதன் மூலமே பெண் சமத்துவத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முடியும்.

வெறுமனே பெண் சமத்துவம் என்று பேசிக்கொண்டு இருப்பதால் ஒன்றும் நடைபெறப் போவதில்லை. பெண்கள் வன் முறைகள் தொடர்பில் கையாள்வதற்கு நீதித் துறையிலும் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். -என்றார். (ஐ)

# சனசமூக நிலையத்தின் அபிவிருத்திக்கு நிதி



மந்திகை,டிசெ.12

வடமாகாணசபை உறுப்பினர் எஸ்.அகிலதாஸின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து இராஜகிராமம் சனசமூக நிலையத்துக்கு ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்த சனசமூக நிலையத்தில் களஞ்சிய அறை இன்மையால் பொருள்களை வைத்து எடுக்க முடியாத நிலையில் காணப்படுகிறது என்று சனசமூக நிலையத்தினரால் வடமாகாண சபை உறுப்பினர்களின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து 2016ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கும் வைபவம் கரவெட்டிப் பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. (ஐ-40)



# கரவெட்டி பிரதேசத்தில் வாழ்வாதார உதவிகள்

*வடமராட்சி,டிசெ.12*

*கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் பன்னிரண்டு பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.*

*கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நிர்வாக உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அந்தப் பகுதியைச் சேர்ந்த தச்சுத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட பன்னிரண்டு பயனாளிகளுக்கு பட்டறை நடத்துவதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஐ-40)*

# நமசிவாயம் சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம்,டிசெ.12

ஸ்ரீ சிவகுருநாத குரு பீடம், மகாதேவ சுவாமிகள் ஆசிரமம் மற்றும் வேதாந்த மடம் நடத்தும், ஸ்ரீமத் நமசிவாயம் சுவாமிகளின் வருடாந்த குருபூசை நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ். கந்தர்மடம் இல-18, குமாரசாமி ஸ்ரீ சிவ குருநாத குருபீடத்தில் இடம் பெறும்.


இந்த நிகழ்வில் சைவ வித்தியா விருத்திச் சங்க மாணவர்களினால் பஜனையும்,''சித்தர்களின் ஞானம்'' எனும் தலைப்பில் சைவப் புலவர் கந்த சத்தியதாசன் நிகழ்த்தும் சொற்பொழிவும், மற்றும் பூசை வழிபாடுகளுடன் மகேஸ்வர பூசை யும் இடம் பெறும். இந்த குருபூசைக்கு அடியவர்களைக் கலந்து கொள்ளுமாறு குருபீடாதிபதி ஸ்ரீவேத வித்தியாசாகரர் சுவாமிகள் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7)

# பொதுக்கூட்டம்

காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பாடசாலையின் நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் தலைவர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. இதே வேளை பாடசாலை யின் பழைய மாணவர் சங் கத்தில் இணைய விரும்புவோர் விண்ணப்பத்தை சங்கச் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# எயிட்ஸ், மதுபாவனை விழிப்புணர்வு ஆற்றுகை





வடமராட்சி,டிசெ.12

எயிட்ஸ் மற்றும் போதைப் பொருள் சம்பந்தமான விழிப் புணர்வை ஏற்படுத்தும் முகமாக வீதி வழி நாடக ஆற்றுகைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

யாழ். போதனா வைத்தியசாலை எயிட்ஸ் தடுப்புப் பிரிவினரின் ஏற்பாட்டில் சுகாதாரப் பகுதியினரின் அனுசரணை யுடன் இவ்வீதி விழா நாடகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தொலைபேசிப் பாவனை, மதுவுக்கு அடிமையாதல், போதைப் பொருள் பாவனை, கலாசார சீரழிவுகள், தற்கொலைகள் போன்றவற்றை சித்திரிக்கும் முகமாக இவ்வீதி வழி நாடகங்கள் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதன் ஒரு பகுதியாக மந்திகையிலும் இந்த ஆற்றுகை இடம்பெற்றது. (ஐ-40)

## ஒடிசாவில் படகு கவிழ்ந்து நால்வர் பலி!

ஒடிசா மாநிலம், கஞ்சம் மாவட்டத்தில் ஏரியில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 4 பேர் உயிரிழந்தனர். அவர்களில் இருவர் குழந்தைகள்.

கஞ்சம் மாவட்டம், சபுலியாவில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 29 பேர், பின்னர் அங்கிருந்து கான்டசிலா என்ற பகுதிக்கு சிலிகா ஏரி வழியாக மோட்டார் படகில் சென்றனர். அப்போது திடீரென அந்தப் படகு எதிர்பாராத விதமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் அந்தப் படகில் இருந்த 2 குழந்தைகள் உட்பட 4 பேர் பலியாகினர். மேலும் 25 பேர், அந்தப்பகுதியில் இருந்த மீனவர்கள், படகோட்டிகளால் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

10 பேர் மட்டும் செல்லும் வசதியுடைய அந்தப் படகில் 29 பேர் சென்றதே விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதுதொடர்பாக அந்தப் படகை இயக்கிய 2 படகோட்டிகளையும் கைது செய்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (எ)

# 120 படகுகளை மீட்டுத்தருமாறு மனு பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவு

## மத்திய, மாநில அரசுகளுக்கு உயர் நீதிமன்றம் பணிப்பு

டில்லி, டிசெ.12

இலங்கைக் கடற்படையின் பிடியில் உள்ள தமிழக மீனவர்களின் 120 படகுகளையும் மீட்கக் கோரிய மனுவுக்கு மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இராமநாதபுரம் திருவாடானையைச் சேர்ந்த திருமுருகன் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில்-


"இராமநாதபுரம், இராமேஸ்வரம், எஸ்.பி.பட்டினம், தொண்டி, நம்புதாளை, சோழியகுடி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் அதிக அளவில் மீனவர்கள் உள்ளனர். அண்மைக் காலங்களில் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குவதும், மீன் பிடிப்படகுகளை சேதப் படுத்துவதும், பறிமுதல் செய்வதும் அதிகரித்து வருகின்றன. இதனால், தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுவரை தமிழக மீனவர்களின் 120 மீன்பிடிப் படகுகளையும் இலங்கைக் கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர். இதில், 80 படகுகள் இராமேஸ்வரம் மீனவர்களுக்குச் சொந்தமானவை. ஒவ்வொரு படகும் சுமார் ரூ.30 லட்சம் மதிப்புடையவை.

இந்தப் படகுகளை மீட்கவும், இழப்பீட்டுத் தொகை வழங்கவும் நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசுக்கு கடந்த மாதம் 11 ஆம் திகதி தமிழக அரசு கடிதம் அனுப்பியது. ஆனால், நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே, இலங்கைக் கடற்படையின் பிடியில் உள்ள 120 தமிழக மீன் பிடிப் படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்துக்கு உத்தரவிட வேண்டும்' என்றுள்ளது.

அந்த மனு, நீதிபதிகள் ஏ.செல்வம், பி.கலையரசன் அமர்வில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் ஆர்.அழகுமணி வாதிட்டார். மத்திய, மாநில அரசுகள் பதில் மனு தாக்கல்செய்ய உத்தரவிட்டு விசாரணையை ஜனவரி 9 ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர். (எ)



ஆஸ்திரேலியாவில் இருந்து நூற்றுக்கணக்கான பிளமிங்கோ பறவைகள் இனப்பெருக்கத்துக்காக தனுஷ்கோடி கடற்கரைப் பகுதிக்குச் சென்றுள்ளன. நவம்பர், டிசெம்பர் மாதங்களில் அந்தப்பகுதியில் நிலவும் இதமான பருவநிலையால் பிளமிங்கோ பறவைகள் கண்டங்களை கடந்து அங்கு சென்று இனப் பெருக்கத்தில் ஈடுபடுகின்றன.

## மாற்று சிறுநீரகத்துடன் சுஷ்மா வெற்றிகரமாக சத்திர சிகிச்சை



டில்லி, டிசெ.12

மத்திய வெளியுறவு அமைச்சர், சுஷ்மா சுவராஜுக்கு, டில்லி 'எய்ம்ஸ்' மருத்துவமனையில், நேற்று முன்தினம் சிறு நீரக மாற்று அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

பா.ஜ.க. மூத்த தலைவரும், வெளியுறவுத் துறை அமைச்சருமான, சுஷ்மா சுவராஜ் (வயது 64) சிறுநீரகச் செயலிழப்பால், கடந்த மாதம், டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு, 'டயாலிசிஸ்' சிகிச்சை அளிக்கப்பட்டது. தான் சிகிச்சை பெறுவது தொடர்பில் சுஷ்மா சுவராஜ், சமூக வலைத் தளமான, 'டுவிட்டரில்' தெரிவித்திருந்தார். இந்தநிலையில், நேற்று முன்தினம் அவருக்கு எய்ம்ஸ் மருத்துவமனையில், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

இதுதொடர்பில் எய்ம்ஸ் மருத்துவமனை மருத்துவர்கள் கூறியதாவது:

"மத்திய அமைச்சர், சுவராஜுக்கு, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்டது.

அவர் நலமுடன் உள்ளார். இந்த அறுவைச் சிகிச்சை, 5 மணித்தியாலங்கள் இடம்பெற்றது. அறுவைச் சிகிச்சைக்குப் பிந்திய சிகிச்சைக்காகவும், தொடர் கண்காணிப்புக்காகவும் சுஷ்மா தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உறவினர் அல்லாத நபரின் சிறுநீரகம், அவருக்குப் பொருத்தப்பட்டுள்ளது.'' - என்றனர். (எ)

## எம்.ஜி.ஆர். நினைவிடத்துக்கு பெயர் மாற்றம்



சென்னை, டிசெ.12

'பாரத ரத்னா' எம்.ஜி. ஆரின் நினைவிடம் என்பதை பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். நினைவிடமாக மாற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடல் சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. மேலும், அவருக்கு எம். ஜி.ஆர். நினைவிட வளாகத்திலேயே நினைவிடம் அமைக்கும் பணியை பொதுப்பணித்துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தநிலையில், முதலமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜெயலலிதாவின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ரூ.15 கோடி செலவில் நினைவு மண்டபம் அமைக்கவும், பாரத ரத்னா எம்.ஜி.ஆர். நினைவிடம் என்பதை பாரதரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி அம்மா செல்வி ஜெ.ஜெயலலிதா நினைவிடம் என்று பெயர் மாற்றம் செய்யவும் அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (எ)

# ஜெயலலிதாவின் மரணத்தில் மர்மம்; பிரேத பரிசோதனை செய்ய வேண்டும்

## பெங்களூர் சமூக செயற்பாட்டாளர் வலியுறுத்து

சென்னை, டிசெ.12

தமிழகத்தின் மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்தில் மர்மம் நிலவுவதால், அவரது உடலைத் தோண்டி எடுத்து பிரேதப் பரிசோதனை செய்ய வேண்டும் என்று பெங்களூரைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் ஒருவர் வலியுறுத்தியுள்ளார் என்று இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த சமூக செயற்பாட்டாளர் ஊடகத்துக்குத் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த செப்ரெம்பர் மாதம் வரை நலமுடன் இருந்த ஜெயலலிதா திடீரென இரவில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சாதாரண காய்ச்சல், நீர்ச்சத்து குறைபாடு, ஓரிரு நாள்களில் வீடு திரும்புவார் என்று முதலில் கூறப்பட்டது. அடுத்த சில தினங்களில் வெளிநாட்டு மருத்துவர்களை வரவழைத்து சிகிச்சை அளித்தார்கள்.

அவரது உடலுக்கு என்ன பிரச்சினை என்று வெளிப்படையாக அறிவிக்காததால் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது.


இந்நிலையில் கடந்த 4 ஆம் திகதி இரவு திடீரென ஜெயலலிதாவுக்கு மாரடைப்பு என்று அப்பலோ மருத்துவமனை அறிவித்தது.

இதேவேளை 70 நாள்களுக்கு மேலாக மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்ததுடன் உடல்நிலை முற்றிலும் தேறிய ஒருவருக்கு எப்படி திடீரென மாரடைப்பு வரும் என்று சந்தேகம் எழுந்தது.

கடந்த 5ஆம் திகதி அவர் இறந்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

ஜெயலலிதாவின் உடலை அவசர அவசரமாக மறுநாள் மாலையே அடக்கம் செய்துள்ளனர்.

மேலும் ஜெயலலிதாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மக்கள் வெளி ஊர்களில் இருந்து வந்துகொண்டிருந்த நிலையில் உடனடியாக அடக்கம் செய்ய வேண்டிய அவசியம் என்ன?



எனவே ஜெயலலிதாவின் மரணத்தில் மர்மம் இருப்பதால், அவரது உடலைத் தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை நடத்த உத்தரவிட வேண்டும்.- என்றார். (எ)

## இந்தோனேசியாவில் 45 ஆயிரம் பேர் வீடுகளை இழந்தனர்

ஜகார்த்தா, டிசெ.12

இந்தோனேசியாவில் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் சுமார் 45 ஆயிரம் பேர் தங்களது வீடுகளை இழந்துள்ளனர்.

இந்த நிலநடுக்கத்தால் கட்டட இடிபாடுகளில் சிக்கி 100 பேர் பலியாகினர். பலர் காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தநிலையில் சுமார் 45 ஆயிரம் பேர் தங்களது வீடுகளை இழந் துள்ளனர் என்று இந்தோனேசிய அரசு கூறியுள்ளது. ஏராளமானோர் தமது உடைமைகளை இழந்துள்ளனர்.

மீட்கப்பட்ட மக்கள் மசூதிகளிலும், பாடசாலைகளிலும் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சில இடங்களில் மோப்ப நாய்களின் உதவியுடன் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

11 ஆயிரம் கட்டடங்கள் வரை முற்றிலுமாக தரைமட்டமாகியுள்ளன.

இந்த நிலையில், நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இந்தோனேசிய மக்களுக்காக ஆஸ்திரேலிய அரசு நிவாரணப் பணிகளுக்கென ஒரு மில்லியன் டொலர் வழங்குவதாக அறிவித்துள்ளது. (எ)

# துருக்கியில் தற்கொலைத் தாக்குதல்கள் 29 பேர் உயிரிழப்பு;116 பேர் காயம்

## பொலிஸாரைக் குறி வைத்து நடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம்





இஸ்தான்புல், டிசெ.12

துருக்கியின் பழைமை வாய்ந்த நகரமான இஸ்தான்புல்லில் உள்ள உதைபந்தாட்டத் திடல் அருகே நேற்று நடத்தப்பட்ட கார்க் குண்டு மற்றும் மனித குண்டுத் தாக்குதல்களில் 29 பேர் உயிரிழந்தனர். 116 பேர் வரையில் காயமடைந்தனர். அவர்களில் பெரும் பாலானோர் பொலிஸ் அதிகாரிகள் என்று தெரிவிக்கப்படுகின்றது. உதைபந்தாட்டம் முடிந்த ஒரு மணி நேரத்துக்குப் பின்னர், உதைபந்தாட்ட மைதானத்துக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கலவரத் தடுப்புப் பொலிஸாரின் வாகனத்தைக் குறி வைத்து முதல் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட் டது.

சில நிமிடங்களுக்குப் பின்னர், அருகில் இருந்த பூங்காவில், சந்தேகத்துக்கு உரிய தற்கொலைக் குண்டு தாக்குதல்தாரி தன்னைத் தானே வெடிக்கச் செய்தார்.

கால்பந்து ரசிகர்கள் அனைவரும் தாக்குதலுக்கு முன்பே அந்தப் பகுதியில் இருந்து சென்றுவிட்டனர் என்றும், இல்லை என்றால் குறித்த தாக்குதல் பெரும் உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தியிருக்கும் என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடைபெற்ற பகுதியில் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அதேசமயம் தாக்குதலில் காயம் அடைந்த பொலிஸ் அதிகாரிகளை மீட்டு உடனடியாக அருகில் அமைந்திருக்கும் மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்புத் தொடர்பாக 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று துருக்கியின் உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் தொடர்பில், குர்து பிரிவினைவாதிகள் மீது குற்றம் சுமத்தப்படுவதாக இஸ்தான்புல்லில் உள்ள பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

16 மாதங்களுக்கு முன்பு தங்களது போர் நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததிலிருந்து, பாதுகாப்புப் படையினரை குறிவைத்து. அவர்கள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இஸ்தான்புல்லில் கடைசியாக நடைபெற்ற கொடூரத் தாக்குதல், ஜூன் மாதம் நடத்தப்பட்ட விமான நிலையக் குண்டு வெடிப்புத் தாக்குதல். அதற்கு ஐ.எஸ்.அமைப்பின் மீது குற்றம் சுமத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காயங்களுடன் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால்உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக் கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. (எ)

## நூற்றுக்கணக்கானோர் அலெப்போவில் மாயம்!

### ஐ.நா.மனித உரிமைகள் அமைப்பு தெரிவிப்பு

நியூயோர்க், டிசெ.12


கிழக்கு அலப்போவில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியிலிருந்து வெளியேறிய நூற்றுக்கணக்கானவர்களைக் காணவில்லை என்று ஐக்கிய நாடுகள் அமைப்பின்மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மனித உரிமை அமைப்பின் பேச்சாளர் ரொபர்ட் கொல்வில்லி தெரிவித்ததாவது:

"இவ்வாறு காணாமற் போனோர் அரச படையினரிடம் சிக்கியிருக்கக் கூடும். அவர்களின் நிலைமை தொடர்பில் அக்கறை கொண்டுள்ளோம். அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்றவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

சட்டவிரோதக் கைதுகள், தடுத்து வைத்தல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் என்ற அச்சம் நிலவி வருகின்றது. 30 முதல் 50 வயது வரையான பெரும் எண்ணிக்கையிலான ஆண்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர் என்று குடும்ப உறுப்பினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்."-என்றார்.

இதேவேளை கிழக்கு அலப்போவின் 85 வீதமான பகுதியை சிரிய அரச படையினர் மீட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)



சீனாவில் 208 கிலோ கிராம் எடையுடைய கடல் ஆமை ஒன்றை 6 பேர் இணைந்து பிடித்துள்ளனர். அங்கு கடல் ஆமை இறைச்சி ஒரு கிலோ கிராம் 140 யுவான் விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றாமை குறிப்பிடத்தக்கது.

## சரக்கு ரயில் தடம்புரண்டது பல்கேரியாவில் 4 பேர் பலி

சோபியா, டிசெ.12

பல்கேரியாவின் வடகிழக்குப் பகுதியில் சரக்கு ரயில் தடம் புரண்டு ஏற்பட்ட விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

தலைநகர் சோபியாவில் இருந்து சுமார் 240 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஹிட்ரினோ என்ற கிராமத்தின் வழியாக எளிதில் தீப்பிடிக்கக்கூடிய இரசாயனத் தாங்கிகளுடன்ஒரு சரக்கு ரயில் நேற்று அதிகாலை பயணித்துள்ளது.

திடீரெனத் தண்டவாளத்தை விட்டு விலகிய அந்த ரயிலிலுள்ள இரு தாங்கிகள் கீழே சரிந்து விழுந்தன. விழுந்த வேகத்தில் இரு தாங்கிகள் பயங்கரமாக வெடித்துச் சிதறித் தீப்பிடித்து எரியத் தொடங்கின என்று தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்தில் ரயில் பாதையோரமுள்ள 20 க்கும் மேற்பட்ட வீடுகள் தீப்பிடித்து எரிந்தன. அவற்றில் வசித்த பலருக்கு பலத்த தீக்காயம் ஏற்பட்டது. தகவலறிந்து மீனவ கிராமமான அந்தக் கிராமத்தில் வசிக்கும் மீனவர்கள் விரைந்துசென்று மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (எ)

## நைஜீரியாவில் தேவாலயக் கூரை இடிந்து விழுந்ததில் 60 பேர் பலி

நைஜர், டிசெ.12

நைஜீரியா நாட்டின் தென்பகுதியில் தேவாலயக் கூரை நேற்று முன்தினம் இடிந்து விழுந்ததில் அங்கு வழிபாட்டுக்காகக் கூடியிருந்தவர்களில் 60 பேர் உயிரிழந்தனர், பலர் காயமடைந்தனர்.

நைஜீரியாவில் அக்வா இபோம் என்ற மாநிலம் உள்ளது. அதன் தலைநகரான உயோ என்ற இடத்தில்பிரபலமான கிறிஸ்தவ தேவாலயம் அமைந்துள்ளது.



இந்தத் தேவாலயத்தை விரிவாக்கம் செய்வதற்காக கட்டுமானப் பணிகள் நடைபெற்று வந்த நிலையில் அந்த திருச்சபையின் நிறுவுநரான அகான் வீக்ஸ் என்பவருக்கு அருட்தந்தை பட்டம் வழங்கும் விழா நேற்றுமுன்தினம் அங்கு நடைபெற்றது. இந்த விழாவுக்காக நூற்றுக்கணக்கான பக்தர்கள் தங்களது குடும்பத்துடன் சென்றிருந்தனர்.

இந்தநிலையில் தேவாலயக் கட்டடத்தின் மேற்கூரையைத் தாங்கிப் பிடிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த இரும்புச் சாரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக சரிந்து விழுந்தன.

இந்த விபத்து பற்றிய தகவல் அறிந்து விரைந்து சென்ற மீட்புப் படையினர் இடிபாடுகளில் சிக்கி உயிருக்குப் போராடிய பலரை மீட்டு, ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைத்தனர். (எ)

## அவசரகாலச்சட்டம் பிரான்ஸில் நீடிப்பு

பரிஸ், டிசெ.12

பிரான்ஸில் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பரிஸில் தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி அங்கு தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அதனைக் கருத்திற்கொண்டு அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட உள்ளது. அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் யோசனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து நான்கு தடவைகள் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# போர்க்குற்ற விவகாரத்தில் இருந்து தப்ப எவரது காலையும் பிடிக்க அரசு தயார்!

## மைத்திரியின் வாக்குறுதிகள் எல்லாமே வாய் ஜாலம்தான்

இலங்கையில் அரசியல் மாற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்புத் தொடர்பாக வாக்குறுதிகளை வழங்கி யதன் மூலம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற ஆச்சரியமூட்டும் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றார்.

தற்போதைய இலங்கை அரசாங்கம் தன்னால் வழங்கப்பட்ட இந்த வாக்குறு திகளை நிறைவேற்றுவதில் எவ்வளவு தூரம் பணியாற்றியுள்ளது என்பது தொடர்பாக கடந்த புதனன்று சித்திர வதைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபை ஆணைக்குழு வினவியது.

இலங்கை பொலிஸாரால் தொடர்ந் தும் சித்திரவதைகள் முன்னெடுக்கப் படுதல் தொடர்பாகவும் இந்த ஆணைக் குழு சுட்டிக்காட்டியதுடன், 2009இல் நிறைவுற்ற 26 ஆண்டுகால கொடிய யுத்தத்தின் இறுதியில் இலங்கை பாதுகாப்புப் படையினரால் பல்வேறு போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்ட போதிலும் அவை தொடர்பாக துரித விசாரணை மேற்கொண்டு தண்டனை வழங்குவதற்கு இலங்கையின் தற் போதைய அரசாங்கம் தவறியுள்ளதாக வும் ஐ.நா ஆணைக்குழு சுட்டிக்காட்டியது.

ஜெனீவாவில் நவம்பர் மாத முடிவில் இரண்டு நாள்கள் இடம்பெற்ற ஐ.நா ஆணைக்குழுவான 'சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழுவின் மாநாட்டின் போது இலங்கையில் தொடரப்படும் சித்திரவதைகளும் ஆராயப்பட்டன. இலங்கை காவற்றுறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவுத் திணைக்களத்தால் தொடர்ந்தும் இவ்வாறான சித்திரவதைகள் மேற்கொள் ளப்படுவதற்கான வலுவான ஆதாரங்கள் காணப்படுவது தொடர்பில் கவலை கொள்வதாக சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழு தெரிவித்தது.

### நீதியின்முன் கொண்டுவர தயங்கும் அரசு

இவ்வாறான சித்திரவதைகள் தொடர் பாக விசாரணை செய்து குற்றவாளிகளை நீதியின் முன்நிறுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் வெளிப்படையாகத் தயக்கம் கொள்வது தொடர்பாகவும் சித்திர வதைக்கு எதிரான ஆணைக்குழு தனது கவலையை வெளிப்படுத்தி யுள்ளது.

பாதுகாப்புத் துறையில் நிறுவக ரீதியான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை இலங்கை அரசு முன்னெடுக்கவில்லை என இலங்கையின் மனித உரிமை நிலைப் பாடு தொடர்பாக ஆராய்ந்த ஆணைக்குழு வில் அங்கம் வகித்த இரண்டு வல்லு நர்களில் ஒருவரான பீலிஸ் டி. காயர், ஜெனீவாவில் நடத்திய ஊடக மாநாட்டில் தெரிவித்தார்.

### பாதுகாப்புத்துறையில் மாற்றம் கொண்டுவர தயங்கும் தலைவர்கள்

இலங்கையால் வாக்குறுதி வழங்கப் பட்ட பல்வேறு விடயங்கள் இன்னமும் நிறைவுபடுத்தப்படாது உள்ளன. ஆகவே இங்கு தொடர்ந்தும் சித்திர வதைகள் இடம் பெறுகின்ற போதிலும் அது தொடர்பாக விசாரணை செய்யப் படாத நிலை காணப்படுகிறது என காயர் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி சிறிசேனவும் நாட்டில் மனித உரிமைகளை மேம்படுத்துவதாக வாக்குறுதி அளித்த போதிலும், நாட்டின் பலம்மிக்க பாதுகாப்புத் துறையில் மாற்றங்களைக் கொண்டு வருவதில் அச்சம் கொள்வதன் காரணமாக இதில் தாமதம் காண்பிப்பதாக சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழுவால் உறுதிப் படுத்தப்பட்டுள்ளதுடன் இது மனித உரிமைச் செயற்பாட்டாளர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டு யுத்தத்தின் இறுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது 40,000 வரையான தமிழ்ப் பொது மக்கள் படுகொலை செய்யப் பட்டுள்ளனர் என்று ஐ.நா வல்லுநர் குழு மதிப்பீடு செய்தது. அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற படுகொலை கள், சித்திரவதைகள், பாலியல் வன் முறைகள் மற்றும் பலவந்தக் காணாமற் போதல்கள் போன்ற பல்வேறு பயங்கரமான மீறல்கள் இடம்பெற் றுள்ளதை விசாரணையாளர்கள் விரிவாக ஆவணப்படுத்தியுள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி சிறிசேன தேர்தலில் வெற்றி கொண்ட பின்னர், உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவேன் எனவும் போரின் போது காணாமற் போன பல பத்தாயிரக்கணக்கான பொதுமக்களுக்கு என்ன நடந்தது என்பதை விசாரணை செய்வதற்கான அலுவலகம் ஒன்றையும் உருவாக்குவேன் எனவும் கடந்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு மீறல்களுக்குப் பொறுப்புக்கூறுவதற் கான நீதிசார் பொறிமுறை ஒன்றை உருவாக்குவேன் எனவும் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

### போர்க் குற்றத்திலிருந்து தப்பமுயலும் சிறிசேனா

இந்நிலையில், இலங்கையால் மேற்கொள் ளப்பட வேண்டிய மனித உரிமை தொடர்பான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கூறல் போன்றவற்றி லிருந்து தனது நாட்டை விடுவிப்பதற்கு உதவுமாறு அமெரிக்காவில் தற்போது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப் பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பிடம் எழுத்து மூலம் ஜனாதிபதி சிறிசேன கடந்த மாதம் கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன் இந்த விடயத்தில் உதவுமாறு தற்போது ஐ.நா செயலாளர் நாயக மாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள போர்த்துக்கலைச் சேர்ந்த அன்ரோ னியோ குரெரெசிடமும் கோரிக்கை விடுவதற்கும் சிறிசேன திட்டமிட்டுள் ளார்.

சிறிசேன தனது நாட்டை போர்க் குற்ற வழக்கிலிருந்து விடுவிப்பதற்கு ட்ரம்பிடம் உதவி கோருவது உண்மை யாக இருந்தால் இது ஏற்கனவே நடை முறையிலுள்ளதையே மீளவும் செயற் படுத்தத் தூண்டுகிறது என அனைத்து லக நெருக்கடிகள் குழுவைச் சேர்ந்த இலங்கை வல்லுநர் அலன் கீனன் தெரிவித்தார்.

'ஏற்கனவே ஜனாதிபதி சிறிசேன மற்றும் பிரதமர் விக்கிரமசிங்க ஆகியோர் தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறை வேற்றாது காலத்தை இழுத்தடிக்கிறார்கள் என்கின்ற சந்தேகம் காணப்பட்டது. ஆனால் காலம் செல்லச் செல்ல இந்தச் சந்தேகம் மேலும் அதிகரித்துள்ளது' என அலன் கீனன் தெரிவித்தார்.

### குற்றவாளிகளைத் தண்டிக்கத் தயக்கம்

கடந்த யுத்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பணியாற்றுவதற்காக சிறிசேனவால் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு மற்றும் மனித உரிமை களை மேம்படுத்துவதற்கான தேசிய திட்டம் போன்ற சில பொறிமுறைகள் உருவாக்கப்பட்ட போதிலும் கடந்த காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாகவும் பல்வேறு மீறல்கள் தொடர்பாகவும் விசாரணை செய்து குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கான எவ்வித சட்ட நடவடிக்கையையும் சிறிசேன முன்னெடுக்கவில்லை என சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் இலங்கையில் தற்போதும் தொடரும் வெள்ளை வான் கடத்தல்கள், மறைவான தடுப்புச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் காணா மற் போனவர்கள் போன்ற பல்வேறு மீறல்கள் தொடர்பாகவும் சித்திரவதைக்கு எதிரான ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது. மேலும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் நம்பகமான சாட்சியப் பாதுகாப்பற்ற நிலையில் தொடர்ந்தும் பலர் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகவும் இந்த ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

## 3 நூல்களுக்கான வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ.12

கலாநிதி கலாமணியின் 'தெளிதல்', 'எம்மவர்கள்', 'பூதத்தம்பி' என்கிற தலைப்பி லான மூன்று நூல்களுக்கான வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரியில் கோப்பாய், ஆசிரிய கலாசாலை உப அதிபர் ச.லலீசன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையை ஜீவநதி ஆசிரியர் க.பரணீத ரனும், வெளியீட்டுரையை சாகித்ய ரத்னா தெணியானும் வழங்குவர். நயப்புரைகளை ஓய்வுநிலை வங்கி முகாமை யாளர் பி.கிருஷ்ணானந்தன், யாழ்.கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் கே.ஆர்.கமல நாதன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணன் ஆகியோரும் ஆற் றுவர். (இ-32)

## போர்ச்சூழலிலும் துணிச்சலுடன் பணியாற்றிய ஊடகவியலாளர்

### மாகாண சபை உறுப்பினர் இராஜேஸ்வரன் பாராட்டு

இலங்கையில் போர்ச் சூழல் நிலவிய காலத்தில் பல ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட னர். இன்னும் பல ஊடக வியலாளர்கள் தாக்கப்பட்ட னர்.சிறையில் அடைக்கப்பட் டனர். பலர் இந்த நாட்டில் வாழ முடியாமல் புலம் பெயர்ந்து சென்றனர். இத் தகைய அச்சம் நிறைந்த சூழலில், தான் சார்ந்த சமூகத்திற்காகவும் சமூக மக்களுக்காகவும் மட்டு மன்றி நம் தமிழ் சமூகத்திற் காகவும் சலீமின் பேனா முனை குரல் கொடுத்து வந்துள்ளது.

இவ்வாறு கூட்டமைப் பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.இரா ஜேஸ்வரன் குறிப்பிட்டார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.எல்.எம்.சலீமின் ஐம்பது



வருட கால ஊடகப் பணி யைப் பாராட்டி இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் பொன்விழா நிகழ்வில் கௌரவிக்கப்பட்டமை குறித்த "விருதை வாழ்த்தும் விழா" - அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம், வடக்கு- கிழக்கு ஜீவோதய நலன்புரி நிறு வனம் என்பவற்றின் ஏற் பாட்டில் அண்மையில் கல் முனை சனச மண்ட பத்தில் தொழிற்சங்கவாதி எஸ்.லோக நாதன் தலைமை யில் இடம் பெற்றது.இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-151)

## யாழ்.வைத்தீஸ்வரக் கல்லூரிக்கு புதிய நடராஜர் விக்கிரகம்

### பழைய மாணவர்கள் ஏற்பாடு


யாழ்ப்பாணம், டிசெ.12

யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரியின் வழிபாட்டு மண்டபத்தில் உள்ள நடராஜப் பெருமானின் புதிய விக்கி ரகம் ஒன்றை பிரதிஷ்டை செய்வதற்கு பழைய மாணவர் சங்கத்தினர் முன் வந்துள்ளனர்.

ஏற்கனவே இருந்த விக்கிரகம் சேத முற்றிருப்பதால் புதிய விக்கிரகம் ஒன்றை வைப்பதற்கு கல்லூரியின் இந்து மாணவ மன்றத்தினர் பழைய மாணவர் சங்கத்திடம் அதற்கான பொறுப்பை ஒப்படைத்துள்ளனர்.

புதிய விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்வதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு பழைய மாணவர்கள் நலன்விரும்பிகளை நாடியுள்ளனர். உதவவிரும்புவோர் பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் ச.சிவகுமாரன், 70/11, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ள லாம் என்று அறிவிக்கப்பட்டுள் ளது. (இ-19)

# ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் கபடித் தொடர்: முனை சென்.தோமஸ் 'ஏ' அணி இறுதிக்குத் தெரிவு





வடமராட்சி கபடி சங்கத்தின் அனுமதியுடன் பருத்தித்துறை நகர அபிவிருத்திச் சங்கம் சுவிஸ் அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மின்னொளியில் லீக் முறையில் நடத்தும் கபடிச் சுற்றுப் போட்டித் தொடர் கடந்த 09.11.2016 அன்று ஞாயிறு மாலை 7மணிக்கு ஆரம்பமாகியது. இப்போட்டியில் 'ஏ' பிரிவில் ஐந்து கழகங்களும் 'பி' பிரிவில் ஐந்து கழகங்களும் போட்டியிடுகின்றன.

10.12.2016 அன்று மாலை7 மணிக்கு ஆரம்பமாகிய அரையிறுதிப் போட்டியில் பருத்தித்துறை – முனை சென். தோமஸ் 'ஏ'அணியும் ஐக்கியம் 'ஏ'அணி அணியும் போட்டியிட்டன.

போட்டி முழுவதும் விறுவிறுப்புக்குப் பஞ்சமில்லாது சென்றது. இறுதி வரைக்கும் யார் வெல்லுவார்கள் என்று கூறமுடியாது நகர்ந்து சென்ற போட்டியில் பருத்தித்துறை – முனை சென். தோமஸ் 'ஏ' அணி வழமைக்கு மாறாக ஆக்ரோஷமாகத் தாக்குவதைத் தவிர்த்து தற்காப்பு ஆட்டத்தில் மட்டும் கவனம் செலுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது.

இப்போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலரும், பருத்தித்துறைப் பங்குத் தந்தை யாவீஸ் அடிகளாரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

போட்டி முடிவுக்கு வரும் போது சென்.தோமஸ் 'ஏ' அணி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

இந்த கபடி போட்டியின் சிறந்த விளையாட்டு வீரராக சென்.தோமஸ் 'ஏ'அணியின் வீரர் அருண்ராஜன் (நந்தன்) தெரிவுசெய்யப்பட்டார்.

# யாழ்.மாவட்ட உதைபந்தாட்டத் தொடர்: சுப்பர் –8 சுற்றுக்குள் நவஜீவன்ஸ் அணி





ஞானமுருகன் அணியை வீழ்த்தி சுப்பர் –8 சுற்றுக்குள் நுழைந்தது நவஜீவன்ஸ் அணி!

நேற்றுமுன்தினம் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட ரீதியிலான 11பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரின் மூன்றாம் சுற்றில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் விறுவிறுப்பாக ஆடின. சில நிமிடங்கள் கடந்து 17ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் சுபாஸ் கோல் போட்டு அசத்தினார். அடுத்த 24ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் சுரேஸ் கோல் போட்டு ஆட்டத்தைச் சமப்படுத்தினார். முதல் பாதியாட்டம் 1:1 என்ற அடிப்படையில் நிறைவுற்றது.

இரண்டாவது பாதியாட்டத்திலும் நவஜீவன்ஸ் ஆதிக்கம் செலுத்தியது. 30ஆவது நிமிடத்தில் பவிதாஸ் கோல் போட்டு அணியின் வெற்றியை உறுதிப்படுத்த இறுதியாட்ட நேர முடிவில் 2:1 என்ற ரீதியில் ஞானமுருகன் அணியை வீழ்த்தி சுப்பர் 8 க்குள் நுழைந்தது நவஜீவன்ஸ் அணி.

# ஐ.எஸ்.எல். கால்பந்துத் தொடர் : மும்பையை வீழ்த்தியது கொல்கத்தா



ஐ.எஸ்.எல். முதல் கட்ட அரை இறுதியில் மும்பையை வீழ்த்தியது கொல்கத்தா.

ஐ.எஸ்.எல். கால்பந்து தொடரின் முதல் கட்ட அரை இறுதி ஆட்டம் கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் அட்லெடிகோ டி கொல்கத்தா–மும்பை சிட்டி எப்சி அணிகள் மோதின. இரு அணிகளும் 4:2 – 3:1 என்ற அடிப்படையில் களமிறங்கின. ஆட்டத்தின் 3ஆவது நிமிடத்தில் கொல்கத்தா முதல் கோலை அடித்தது. போர்ஜா பெர்னாண்டஸ் உதவியுடன் இந்த கோலை ரால்டி அடித்தார். இதனால் கொல்கத்தா 1:0 என முன்னிலை பெற்றது.

10ஆவது நிமிடத்தில் மும்பை அணி பதிலடி கொடுத்தது. லியோ கோஸ்டா அடித்த கோலால் ஆட்டம் 1:1 என சமநிலையை எட்டியது. 19ஆவது நிமிடத்தில் மும்பை தனது 2ஆவது கோலை அடித்தது. அந்த அணியின் நட்சத்திர வீரரான புளோரன் உதவியுடன் இந்தக் கோலை வையரா அடித்தார். இதனால் மும்பை 2:1 என முன்னிலை வகித்தது.

39ஆவது நிமிடத்தில் கொல்கத்தா வீரர் சமீக் டூட்டி உதவியுடன் இயன் ஹூமி கோல் அடித்து 2:2 என சமநிலையை எட்ட செய்தார். 45ஆவது நிமிடத்தில் கொல்கத்தா அணிக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. இதை சரியாகப் பயன்படுத்திய இயன் ஹூமி கோலாக மாற்றினார். இதனால் முதல் பாதியில் கொல்கத்தா 3:2 என முன்னிலை வகித்தது.

2ஆவது பாதியில் மும்பை அணியின் கோல் அடிக்கும் முயற்சிகளுக்குப் பலன் கிடைக்காமல் போனது. அதேவேளையில் கொல்கத்தா அணி தடுப்பாட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தியது. முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் கொல்கத்தா வெற்றி பெற்றது.

இரு அணிகளும் தங்களது 2ஆம் கட்ட அரை இறுதியில் நாளை செவ்வாய்க்கிழமை மும்பையில் மோதுகின்றன. இந்த ஆட்டத்தில் அடிக்கப்படும் கோல்களையும் சேர்த்து சராசரியின் அடிப்படையில் எந்த அணி முன்னிலை பெறுகிறதோ அந்த அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும்.

இந்நிலையில் நேற்று இரவு 7 மணிக்கு கொச்சியில் நடைபெறும் முதல் கட்ட அரை இறுதியில் கேரளா பிளாஸ்டர்ஸ் – டெல்லி டைனமோஸ் அணிகள் மோதின.



## வல்லியானந்தம் விளையாட்டுக் கழகத்தின் சுற்றுப்போட்டிகள்

துன்னாலை, டிசெ.12

துன்னாலை வல்லியானந்தம் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் துடுப்பாட்டம், கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

அமரர்களான கணேசமூர்த்தி பார்த்தீபன், சிவனேசநாதன் கேசிகன் ஆகியோரின் நினைவாக நடத்தப்படும் போட்டிகள் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 13ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (40)

# பாலைக்குளி டிலாசால் விளையாட்டுக் கழகத்துக்கு அமைச்சர் டெனிஸ்வரனால் பாதணிகள் கையளிப்பு




மன்னார் அடம்பன் பாலைக்குளி டிலாசால் விளையாட்டுக்கழகம் தமது உதைபந்தாட்ட அணியின் வீரர்களது பயன்பாட்டுக்காக உதைபந்தாட்ட பாதணிகள் மற்றும் பயிற்சிகளுக்கு பயன்படுத்தும் பாதணிகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்து தருமாறு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனிடம் கோரியிருந்தது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அந்தக் கிராமத்தின் விளையாட்டு வீரர்களும், விளையாட்டுக் கழகமும் வளர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் தனது 2016ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து ரூபா 50 ஆயிரம் நிதியை ஒதுக்கி குறித்த கழகத்துக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்து அந்தக் கழகத்தின் தலைவர் பி.நிலாளன் மற்றும் கழக உறுப்பினர்களிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வு நேற்று ஞாயிறு நண்பகல் 12:30 மணியளவில் மன்னாரில் உள்ள அமைச்சரது உப அலுவலகத்தில் இடம்பெற்றது.

# இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது டெஸ்ட்: இந்தியா 631 ஓட்டங்களுடன் முன்னிலை





இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 631 ஓட்டங்களைப் பெற்றது. இங்கிலாந்தைவிட இந்தியா 231 ஓட்டங்கள் அதிகம் பெற்று முன்னிலையில் உள்ளது.

மும்பை வான்கடே மைதானத்தில் இங்கிலாந்து – இந்திய அணிகள் மோதும் 4ஆவது டெஸ்ட் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 400 ஓட்டங்களை எடுத்திருந்தது. இங்கிலாந்து அணியை அஸ்வினின் சுழல் பந்து வீச்சு கட்டுப்படுத்தியது.

பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய இந்திய அணியில் முரளி விஜய் சதம் அடித்தார். மறுபக்கம் இங்கிலாந்தின் பந்துவீச்சைச் சமாளிக்க முடியாமல் விக்கெட்டுக்கள் சரிந்தன. இதையடுத்து ஜோடி சேர்ந்த முரளி விஜய் – கோஹ்லி கூட்டணி உணவு இடைவேளைக்குப் பிறகு பிரிந்தது. ரவீந்திர ஜடேஜா மற்றும் ஜெயந்த் யாதவ் ஆகியோர் கோஹ்லிக்குத் தோள்கொடுத்தனர். இதனால் இங்கிலாந்தின் பந்துவீச்சைப் பதம்பார்த்த கோஹ்லி தனது 15 ஆவது சதத்தைக் கடந்தார்.

3ஆம் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 451 ஓட்டங்களைக் குவித்திருந்தது. இந்நிலையில் நேற்று 4ஆம் நாள் ஆட்டத்தைத் தொடங்கிய இந்திய அணி காலை முதலே நிதானமாக ஆடி வந்தது. நேற்றைய ஆட்டத்தின் முக்கிய அம்சமாக கோஹ்லி இரட்டைச் சதம் விளாசினார்.

ஒரே ஆண்டில் அவர் அடிக்கும் மூன்றாவது இரட்டைச் சதம் இதுவாகும். இதைத் தொடர்ந்து 9ஆவது நிலை வீரராகக் களமிறங்கிய ஜெயந்த் யாதவ் டெஸ்ட்தொடரில் தனது முதல் சதத்தைப் பதிவு செய்தார். மேலும் 9ஆவது நிலை வீரராகக் களமிறங்கி சதம் அடித்த வீரர் என்ற பெருமை யையும் அவர் பெற்றுள்ளார். இந்நிலையில் இந்திய அணி 631 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் விராட் கோஹ்லி தலைமை யிலான இந்திய அணி இங்கிலாந்தை விட 231 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. இந்திய அணியின் கப்டன் விராட் கோஹ்லி அதிகளவாக 235 ஓட்டங்களும் முரளி விஜய் 136 ஓட்டங்களும் ஜெயந்த் யாதவ் 104 ஓட்டங்களும்

# ஜூனியர் உலக கோப்பை ஹொக்கி: கால் இறுதிக்கு இந்தியா தகுதி!




லக்னோ, டிசெ.12

ஜூனியர் உலக கோப்பை ஆண்கள் ஹொக்கி போட்டித் தொடரின் கால் இறுதியில் விளையாட இந்திய அணி தகுதி பெற்றுள்ளது. உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில், மொத்தம் 16 அணிகள் 4 பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடி வருகின்றன.

டி பிரிவில் இடம்பெற்றுள்ள இந்தியா தனது முதல் லீக் ஆட்டத்தில் கனடா அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. அடுத்து 2ஆவது லீக் ஆட்டத்தில் இங்கிலாந்துடன் நேற்று முன்தினம் மோதியது. மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியில், இங்கிலாந்து அணி வீரர் ஜாக் க்லீ 18ஆவது நிமிடத்தில் கோல் அடித்து அந்த அணிக்கு முன்னிலை கொடுத்தார். இதைத் தொடர்ந்து பதில் தாக்குதலைத் தீவிரப்படுத்திய இந்திய வீரர்கள் அடுத்தடுத்து கோல் அடித்து எதிரணியை திணறடித்தனர்.

பர்விந்தர் சிங் 24ஆவது நிமிடத்தில் கோல் அடித்து 1:1 என சமநிலை ஏற்படுத்தினார். அர்மான் குரேஷி , ஹர்மான் பிரீத் சிங் , சிம்ரன்ஜீத் சிங் , வருண் குமார் ஆகியோர் அபாரமாக கோல் அடிக்க இந்தியா 5 :1 என முன்னிலை பெற்றது. கடைசிக் கட்டத்தில் இங்கிலாந்து வீரர்கள் வில் கால்னன் , எட்வர்ட் ஹார்லர் கோல் போட்டனர். ஆட்ட நேர முடிவில் இந்தியா 5:3 என்ற கோல் கணக்கில் வென்று தொடர்ச்சியாக 2ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

டி பிரிவில் 6 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ள இந்தியா, கால் இறுதிக்கு முன்னேறுவதை உறுதி செய்தது. தனது கடைசி லீக் ஆட்டத்தில் இன்று தென்னாபிரிக்காவை எதிர் கொள்கிறது. முன்னதாக நேற்றுமுன்தினம் நடந்த லீக் ஆட்டங்களில் ஆஸ்திரியா 5:2 என்ற கோல் கணக்கில் கொரியாவையும், தென்னாபிரிக்கா 3:1 என்ற கோல் கணக்கில் கனடாவையும் வீழ்த்தின. ஆஸ்திரேலியா 2:1 என்ற கோல் கணக்கில் அர்ஜென்டினாவைப் போராடி வென்றது.

# டோனியை முந்தினார் ஹோக்லி நேற்றைய டெஸ்டில் சாதனை!

இந்திய கப்டன்களில் டெஸ்ட் போட்டிகளில் டோனி கடந்த 2013இல் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அடித்த 224 ஓட்டங்களே அதி கபட்சமாக இருந்தது. இந்த சாதனையை தற்போது கோஹ்லி 235 ஓட்டங்களைக் குவித்து முறியடித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிராக ஒரே இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் குவித்தவர் என்ற சாதனையையும் கோஹ்லி படைத்துள்ளார். இதற்கு முன்னர் 1993இல் மும்பையில் நடைபெற்ற டெஸ்ட்டில் வினோத் காம்ப்ளி 224 ஓட்டங்கள் சேர்த்திருந்தார்.

**ஒரே தொடரில் 640**

இங்கிலாந்துக்கு எதிரான தற்போதைய தொடரில் கோஹ்லி 640 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். இதற்கு முன்னர் அந்த அணிக்கு எதிராக 2002இல் ராகுல் டிராவிட் 602 ஓட்டங்கள் சேர்த்ததே இந்திய வீரரின் அதிக பட்ச ஓட்டக்குவிப்பாக இருந்தது.

ஒரே தொடரில் இந்திய வீரர் ஒருவர் 600க்கும் மேற்பட்ட ஓட்டங்களைச் சேர்ப்பது இது 7ஆவது முறையாகும். இந்த வகையில் கோஹ்லி , கவாஸ்கர், டிராவிட் ஆகியோர் தலா இரண்டு முறை 600 ஓட்டங்களுக்கு மேல் குவித்துள்ளனர்.

கப்டனாக கோஹ்லி 2000 ஓட்டங்களை 65.50 சராசரியுடன் எட்டியுள்ளார். இந்த வகையிலான சாதனையில் பிராட்மேன் 101.51 சராசரியுடன் முதலிடத்தில் உள்ளார். தற்போது அவருக்கு அடுத்தபடியாக கோஹ்லி 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.



*இலங்கை கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட், 3 ரி20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.*

*இதற்காக மத்யூஸ் தலைமையிலான இலங்கை அணி நேற்றுமுன்தினம் தென்னாபிரிக்காவுக்குப் பயணமாகியுள்ளது.இவ்விரு அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி தென்னாபிரிக்காவில் உள்ள போர்ட் எலிசபெத், சென்ற்.ஜோர்ஜ் பார்க் மைதானத்தில் நடை பெறவுள்ளது.*

காலைக்கதிர் Kalaikkathir



# தெருவில் 5 பேரைக் கடித்துக் குதறிய நாய் அடித்துக் கொல்லப்பட்டது!

## பெண் மரணமான சம்பவத்தை அடுத்து

அல்வாய், டிசெ. 12

வீதியில்சென்றஐந்துபேரைக் கடித்துக் குதறிய நாயை அப்பகுதி இளைஞர்கள் நேற்று அடித்துக் கொன்றனர். அல்வாய்ப்பகுதியில்இந்தச்சம்பவம் நடந்துள்ளது.

இந்த நாய் கடித்த பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். அதையடுத்தே நாய் அடித்துக் கொல்லப்பட்டது.

நாய் கடிக்கு உள்ளான அந்தப் பெண் ஒரு மாதத்தின் பின்னர் நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை அல்வாய்ப் பகுதியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின்தாயானதர்மபாலன்ரதிமலர் (வயது55) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது குறித்துத் தெரியவருவதாவது:-

கடந்த மாதம் தெருவில் நின்ற நாய் இவரைக் கடித்து குதறியதில் அவரது விரல் ஒன்று துண்டிக்கப்பட்டது. உடனடியாக அவர் பருத்தித்துறை தள வைத்திய சாலையில்அனுமதிக்கப்பட்டார்.

இவரைச் சிகிச்சைக்கு உட்படுத்திய வைத்தியர் அப்பகுதிக்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினருக் குத் தெரியப்படுத்தி நாயின் தலையைத் துண்டித்து வருமாறு அறிவுறுத்தியிருந்தார்.

நாயின் தலையைத் துண்டித்து வருகிறோம் எனக் கூறிச் சென்ற அதிகாரிகள், அந்த நாய் பசியின் காரணமாகவே கடித்துள்ளது. விசர் தொற்று இருப்பதாகத் தெரியவில்லை எனச் சுகாதார வைத்திய அதிகாரிக்கு பதில் அளித்துள்ளனர். அதைத் தொடர்ந்து இரண்டு நாள்கள் சிகிச்சை பெற்ற பெண் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

இந்நிலையிலேயே, திடீரென ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக அவர் மீண்டும் பருத்தித்துறை தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச் சைக்காக அங்கிருந்து யாழ்.போதனாவைத்தியசாலையில் மாற்றப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் மாலை சிகிச்சைபலனின்றிஅவர்உயிரிழந்துள்ளார். (இ-9)

## மன்னாரில் நாளை சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு

மன்னார், டிசெ.12

மன்னார் தமிழமுது நண்பர்கள் வட்டம் நடத்தும் வை. கஜேந்திரனின் 'மறுபிறப்பு' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் அமைப்பாளர், தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன், கே.காதர் மஸ்தான், மன்னார் மேலதிக அரச அதிபர் அ.ஸ்ரான்லி டிமெல் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக பேசாலை புனித பற்றிமா மகாவித்தியாலய அதிபர் அருட்சகோதரர் ஜே.ஸ்ரனிஸ்லஸ், மன்னார் தமிழ்ச் சங் கத் தலைவர் சிவஸ்ரீ மகா தர்மகுமாரக் குருக்கள், மன்னார் நகர சபையின் செயலாளர் எக்ஸ்.எல்.றெனால்டோ, கிளிநொச்சி தொழில் நுட்ப உத்தியோகத்தர் இ.குணநாயகம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

நூல் அறிமுகவுரையை திருமதி பொ.றொவீனா நிகழ்த்துவார்.

நூல் வெளியீட்டைத் தொடர்ந்து முதல் பிரதியை துரையம்மா அன்பகத் தலைவர் வே.மனுவேல்பிள்ளை பெற்றுக் கொள்வார். சிறப்புப் பிரதிகள் வழங்கலையடுத்து நூல் ஆய்வு ரையை தேசியக் கலைஞர் எஸ்.ஏ.உதயனும் கருத்துரையை ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி சாந்தி வாமதேவாவும் வழங்குவர்.

இறுதி நிகழ்வாக மன்னார் புனித சவேரியர் பெண்கள் கல்லூரி மாணவி செல்வி. ம.ஜான்சியின்நடனமும்இடம் பெறும்.

(இ-10)

## அனுமதிப்பத்திரமின்றி கட்டுத்துப்பாக்கி வைத்திருந்தவர் கைது

முல்லைத்தீவு டிசெ.12

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிழவன்குளம் பகுதியில் அனுமதி இல்லாமல்கட்டுத்துவக்குவைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபரொருவர் மாங்குளம் பொலிஸாரால் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணியளவில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரிடம்விசாரணைகள்மேற்கொண்ட பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்என்றுபொலிஸார்தெரிவித்தனர். (ம-81)

## உடுப்பிட்டியில் முன்பள்ளியின் ஒளிவிழா, பரிசளிப்பு

உடுப்பிட்டி, டிசெ.12

தென்னிந்திய திருச்சபையின் உடுப்பிட்டி முன்பள்ளியின் ஒளிவிழாவும் பரிசளிப்பும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மிணிக்கு திருச்சபையின் திறந்த வெளி அரங்கில் சபைக் குரு ஆர்.பி பிரதீப்குமார் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர்சி.அகிலதாஸ் கலந்து கொள்வார். (இ-40)

## சிலாவத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடை செய்யப்பட்ட வலைகளைப்பாவித்துமீன்பிடித்தமை கண்டுபிடிக்கப்பட்டது. கைதான மீனவர்களும் சான்றுபொருள்களுடன் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் துறைஅதிகாரிகளிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ-9)

## ஊடகவியலாளர்...:

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட தலையீடு அவசியம் என கடற்படை சுட்டிக்காட்டியுள்ளது எனவும் அரசாங்கத் தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ம)

## மத்திய வங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்உங்களைநியமித்தமை சரியான முறையிலேயே என ஜனாதிபதி கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமிக்கு கூறினார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## அம்பாந்தோட்டை...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

திய ஆசிய நாடுகளில் இந்தியத் தூதுவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள இந்திய இராஜதந்திரியான யோகேந்திரகுமார், இது பற்றிமேலும்கருத்து வெளியிடுகையில் கூறியவை வருமாறு:-

அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவுக்கு விற்க சிறிலங்கா திட்டமிட்டுள்ளது என செய்திகள் வெளியாகியுள்ளன.

உண்மையில் இது இந்தியாவுக்கு கவலை தரக்கூடிய விடயம். இந்தியப் பெருங்கடலில் தனது செயற்பாடுகளை சீனா அதிகரிக்கிறது என்பது தெளிவாகியுள்ளது.

இது மிகப் பெரிய சிக்கலான விவகாரமாக உருவெடுக்கும்.- என்றார் அவர். (இ

## வடக்கிலுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்குஜனாதிபதிதொடர்ந்து உரையாற்றுகையில் –

இப்போது, பல நாடுகளில் லட்சக்கணக்கான இலங்கையர்கள் அகதிகளாக இருக்கின்றனர். வடக்கிலுள்ள அகதி முகாம்களில் ஆயிரக்கணக்கானோர் வாழ்ந்து வருகின்றனர்.

நீண்டகாலமாக இடம்பெற்ற அபிவிருத்தி ஏற்றத்தாழ்வுகள் காரணமாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் வாழ்ந்துவரும் மக்கள் மிகவும் சிரமமான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர். நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களுக்கும் 25 மாவட்டங்களுக்கும் நியாயமான அபிவிருத்தி பயன்களை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

சமயப் பணியில் ஈடுபட்டுள்ளவிகாரைகளைபலப்படுத்தும் அரசாங்க கொள்கைக்கமைய தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

இன்று சில இளம் பிக்குமார்களின் செயற்பாடுகளால் பௌத்தர்கள் மிகவும் வருந்தத்தக்க நிலைக்கு முகங்கொடுத்துள்ளார்கள். அந்த சம்பவங்களை நாட்டுக்கும் உலகத்துக்கும் மறைக்க முடியாது.

எமது நாட்டின் உன்னத வரலாற்று பெருமைகள் தொடர்பாக மகிழ்ச்சியடைவதைப் போன்றே அதனை முன்னெடுத்துச் செல்வதற்காக எதிர்காலத்திலும் ஒழுக்கமிக்க, தர் மத்தைப்போற்றும்உன்னதமான பிக்குமார் தலைமுறை யின் தேவை ஏற்பட்டுள்ளது.- என்றார்.

இந்தநிகழ்வில்அமரபுரசிறிசத்தம்ம யுக்திக்க பிரிவின் மகாநாயக்கர் அதிவணக்கத்துக்குரிய நாக்குளுகமுவே பேமதிலக்காபிதான தேரர் உட்பட துறவியர்கள், அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் மக்கள் பிரதிநிதிகளும் பிரதேசமக்களும்பெருமளவில் கலந்துகொண்டனர். (ம)

## ஒற்றையாட்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டமைப்பின்தலைமைப்பீட வட்டாரங்கள் இத்தகவலை 'காலைக்கதிருக்கு'த் தெரியப்படுத்தின.

ஐ.தே.கட்சியின்உயர்பீடமான செயற்குழுவின் கூட்டம் கடந்த வியாழக்கிழமையன்று நடைபெற்றது. அக்கூட்டம் பற்றியும் அதன் முடிவில் வெளியான கட்சியின் தீர்மான அறிக்கை குறித்தும் அடுத்த நாள் ஊடகங்களில் பரபரப்பான செய்திகள் வெளியாகின.

ஒற்றையாட்சி முறைக்குள் தான் தீர்வு என்றும் –

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீடிக்கலாம் என்றும் –

ஐ.தே.கட்சி தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றதுஎன்றசாரப்படவே அடுத்த நாள் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த விடயம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின்முக்கிய பிரமுகர் ஒருவருடன் தொடர்பு கொண்டு கேட்டோம். அவர் கூறிய விடயங்கள் வருமாறு:-

இந்தச்செய்திகள் குறித்து முதலில்தனித்து பிரதமர் ரணிலைச் சந்தித்துக் கேட்டேன். பின்னர் சனியன்று கூட்டமைப்பின் எம்.பிக்களைப் பிரதமர் சந்தித்த போதும் அவரிடம் கேட்டோம்.

அவர் நிலைமையைத் தெளிவுபடுத்தினார். ஊடகங்களில்வந்த செய்தியின் உண்மை நிலைமையைஅவர்விளங்கப்படுத்தினார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீடிக்க வேண்டும் என்ற தீர்மானம் எதனையும் ஐ.தே.கட்சி எடுக்கவில்லை. தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். அந்தப் பதவிக் காலத்தை அவர் பூர்த்தி செய்யும் வரையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீடிக்கலாம் என்பதே ஐ.தே.கட்சி செயற்குழுவின் தீர்மானம். அதனை 'காலைக்கதிர்' அடுத்த நாள் தனது இதழில் சரியாகவே பிரசுரித்திருக்கின்றது.

அடுத்தது– ஒற்றையாட்சி விவகாரம். ஐ.தே.கட்சி செயற்குழு கூட்டத் தீர்மானம் பற்றிய அறிக்கை ஆங்கிலத்தில் வெளியிடப்படவில்லை. சிங்களத்தில் மட்டுமே அது வெளியிடப்பட்டது என ரணில் சுட்டிக்கட்டினார்.

### 'எக்க இராஜ்ய'

சிங்களத்தில் அந்த விடயம் 'எக்க இராஜ்ய' என்றே கூறப்பட்டுள்ளது. அது ஒற்றையாட்சியைக் குறிக்கும் அதேவேளை, ஒரு நாடு என்பதையும் குறிக்கும் என்றும் ரணில் எமக்குச் சுட்டிக்காட்டினார்.

அரசமைப்புக் கவுன்ஸிலின் வழிகாட்டுக் குழுவில் 'ஒற்றையாட்சி' முறைமைக்குத் தாம் எதிரானவர் என்பதை ரணில் வெளிப்படையாகக் கூறி வருகின்றவர்.

ஒற்றையாட்சி முறைமையின் கீழ் ஒரு சட்டத்தின் மூலம் நாட்டைப் பிரிக்க முடியும். அது ஒற்றையாட்சியைப் பின்பற்றும் இங்கிலாந்தில் கூட நடந்திருக்கின்றது. ஒருசட்டநிறைவேற்றம் மூலம் அயர்லாந்து பிரிந்து சென்றது.

### சமஷ்டியில் பிரிந்து செல்ல முடியாது

ஆனால், சமஷ்டியில் அப்படியல்ல. அதில் இணையும் கட்டமைப்புகள் பிரிந்து செல்லவே முடியாது. சம்பந்தப்பட்ட தரப்புகள் பிரிந்து செல்வதில்லை என்று ஒரு சமூக ஒப்பந்தம் செய்து உறுதி எடுத்துத்தான் அந்தக் கட்டமைப்புக்குள் இணைகின்றன. அதன்பின் பிரிந்து செல்வது குறித்துப் பேசவே முடியாது.

1980 களில் மாவட்ட அபிவிருத்திசபைதோல்வியுற்றபின்னர் நாட்டைப் பிரிப்பது குறித்து தமிழர் தலைவர் அமிர்தலிங்கம்வெளிப்படையாகப்பிரசாரம் செய்தார். அது குறித்து அப்போதைய அரசு சட்டமா அதிபரிடம் கருத்துக் கேட்டது.

ஒற்றையாட்சியின் கீழ் அப்படிப் பிரிந்து செல்வதற்கான கோரிக்கையை முன்வைத்து பிரசாரம் செய்ய முடியும். அதைச் சட்டரீதியாகத் தடுக்க முடியாது என சட்டமா அதிபர் அரசுக்கு அறிவித்தார்.

அதைத்தான்அரசமைப்பு வழிகாட்டல் குழுவில் பிரதமர் ரணில் எடுத்துரைத்தார். நாடு பிரியாமல் ஐக்கியமாக இருப்பதை உறுதிசெய்ய வேண்டுமானால் சமஷ்டிதான் ஒரே வழி எனப் பிரதமர் அங்கு எடுத்துரைத்து வந்தவர்.

''என்னுடைய தனிப்பட்ட நிலைப்பாடு அப்படி இருக்கும் போது ஐ.தே.க. செயற்குழுவில் ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்று நாம் தீர்மானம் நிறைவேற்றுவோமா?" – என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எங்களிடம் கேட்டார்.

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களைகடந்தசனியன்றுபிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்தார். அதன்போதும் அவரிடம் இது குறித்துக் கேட்டோம்.

இந்த விளக்கங்களை அவர் சொன்னார். ஒற்றையாட்சி முறைமைக்கு மாறாக சமஷ்டி முறைமை வருவதையே தாம் விரும்புகின்றார் என்றார் அவர்.

அப்போது அந்தக் கூட்டத்தில் இருந்த இலங்கைதமிழரசுக்கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, பிரதமர் ரணிலிடம் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

''ஒற்றையாட்சி முறைமை வேண்டாம். சமஷ்டித்தீர்வுதான் அவசியம் என்று நீங்கள் (பிரதமர் ரணில் விக்கிரமசிங்க) சொல்கின்றமைக்கும் நாங்கள் சொல்கின்றமைக்கும்இடையில் கூடஎதிரும்புதிருமான – முரண் நிலையான – காரணங்கள் உள்ளன. நீங்கள் நாடு பிளவுபடுவதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகவே அதைக் கூறுகின்றீர்கள். ஆனால், எமது மக்கள் தங்கள் விடயங்களை தாங்களே கவனித்துக்கொள்ளும் முறைமை தேவைஎன்பதற்காக ஒற்றையாட்சியை எதிர்க்கின்றோம். சமஷ்டியை வேண்டுகின்றோம்" –என்றார் மாவை.

பிரதமர் குறுக்கிட்டார் "எது எப்படி என்றாலும் – காரணங்கள் வேறாக இருந்தாலும் – இருதரப்பினருமே ஒற்றையாட்சி வேண்டாம் என்கிறோம். சமஷ்டியை வரவேற்கிறோம். அதில் எங்களுக்குள் தெளிவான உடன்பாடு உண்டுதானே!" – என்று சிரித்தார் பிரதமர்.

– இப்படி அந்த கூட்டமைப்பு வட்டாரம் தகவல் வெளியிட்டது.


(உ)

காலைக்கதிர்
Kalaikkathir

சிறுபான்மை மக்கள்

# அங்கீகாரம் கிடைப்பதற்கு முன்னர் தேசியத்துக்குள் செல்ல முடியாது!

## அப்படிச் சென்றால் அடக்கப்படுவார்கள் - வடக்கு முதல்வர் எச்சரிக்கை



எமது இனத்தின் தனித்துவத்தை வலியுறுத்திக்கொண்டே நாம் தேசியத்தை நோக்கி முன்னேற வேண்டும். சிறுபான்மையினர் தமக்கு அங்கீகாரம் கிடைக்க முன்னர் தேசிய ரீதியாக செயற்பட்டால் அவர்கள் பெரும்பான்மை இனத்திற்குள் இரண்டற கலந்து விடுவார்கள் என்று வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எச்சரித்துள்ளார்.

இன ரீதியாக சிந்தித்தால் இனவாதம் என்று கூறுகின்றனர். அவ்வாறான இன ரீதியான சிந்திப்பு இல்லை என்றால் சிறிய இனம் பெரிய இனத்தினுள் சங்கமம் ஆகிவிடும் என்றும் அவர் அச்சத்தை வெளியிட்டார்.

சர்வோதய அமைப்பின் நல்லிணக்க வேலைத்திட்டத்தின் கீழ் நல்லிணக்கம் மீதான வடக்கு கிழக்கு மக்களின் விதந்துரைகள் எதிர்பார்ப்புகள் குறித்த பிரகடனத்தை வெளியிடும் விசேட நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட முதலமைச்சர் தவிர்க்க முடியாத காரணத்தால் அங்கு செல்ல முடியாத நிலையில், தனது உரையை அறிக்கையாக அனுப்பியிருந்தார். அந்த அறிக்கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

1919 ஆம் ஆண்டு பொன்னம்பலம் அருணாசலம் நாம் யாவரும் இலங்கையர் என்ற சிந்தனையில் செயற்படவேண்டும் என்ற கருத்தை கொண்டிருந்தார். அதனால் தான் பிரிந்திருந்த சமூகங்களை ஒன்றிணைக்கும் நோக்குடன் இலங்கை சீர்திருத்த கழகம், இலங்கை தேசிய சங்கம், யாழ்ப்பாண சங்கம் ஆகியவற்றை ஒன்றிணைத்து இலங்கை தேசிய காங்கிரஸ் என்ற சங்கத்தை அமைத்தார்.

அவர் மனித குலத்தின் ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் மதித்தார். அந்த காலத்தில் ஆங்கிலம் சகல இன படித்த மக்களாலும் பேசப்பட்டு வந்தது. இதனால் ஆங்கில மொழி சகலரையும் ஒன்றிணைத்தது.

இலங்கை மக்களின் அரசியல் ரீதியான கோரிக்கைகளில் ஒற்றுமை இருந்தால் ஆங்கில ஆட்சியாளர்கள் எமக்கு தன்னாட்சி மூலமான ஆட்சி கிடைக்க முடியும் என கூறி இருந்தார்கள். அதனால் தான் மிகவும் பேராசைப்பட்டு ஒற்றுமை உருவாக்கினார் சேர் பொன் அருணாச்சலம். இன ரீதியாக செய்யப்பட்ட யாழ்ப்பாண சங்கத்தை இனரீதியான சடடசபை பிரதிநிதித்துவத்திற்கு பதிலாக பிரதேச ரீதியான பிரதிநிதித்துவத்தினை ஏற்கச் செய்தார்.

ஆனால் ஒரு விடயம் சேர் பொன்னம்பலம் அருணாசலம் இலங்கையின் ஐக்கியத்தினை விரும்பினாரே ஒழிய சில இனத்தவரின் உள்ளக்கிடைக்கைகளை புரிந்து கொள்ள வில்லை .

கொழும்பில் அப்போது பெருமளவு தமிழர்கள் வாழ்ந்தார்கள். கொழும்பில் தமிழ் பேசும் மக்களுக்கு என்று ஒரு ஆசனம் வழங்குவதாக அப்போது உறுதி மொழி அளிக்கப்பட்டது. ஆயினும் ஆங்கிலேயர் சுயாட்சிக்கு ஒத்துக்கொண்ட போதே தமது வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டனர். இதை அருணாசலம் எதிர்பார்க்கவில்லை அப்போதே தமிழ் மக்கள் அரசியல் அநாதைகளாக்கப்பட்டு விடடார்கள்.

எனவே இனரீதியான பிரதிநிதித்துவத்தையும் பிரதேச ரீதியான பிரதிநிதித்துவத்தையும் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இன ரீதியாக சிந்திப்பது தவறு என கூறப்பட்டு வந்தது. அவ்வாறான இன ரீதியான சிந்திப்பு இல்லை என்றால் சிறிய இனம் பெரிய இனத்தினுள் சங்கமம் ஆகிவிடும் என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இனவாத அடிப்படையை தவிருங்கள் என்று கூறும்போது பெரும்பான்மை மக்களுக்குஎமது உரித்துக்களைதாரைவார்த்து கொடுப்பது போல் ஆகிவிடுகிறது. சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்து அவர்களின் அடிப்படை உரிமைகளை வழங்கிய பின்னரே தேசிய ரீதியில் நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுக்க வரவேண்டும். இல்லை என்றால் நாங்கள் பெரும்பான்மை சமூகத்தின் ஒரு அங்கமாக மாறிவிடுவோம்.

பான்யுவான்தர்மபாலா என்ற அரசனுக்கு முடிசூட்டுவதற்காக மதுரையில் இருந்து 400 வருடங்களுக்கு முன்னர் வந்த தமிழர்கள் சிங்கள இடங்களாகிய அம்பலன் கொடை, கல்லுப்பிட்டிய போன்ற இடங்களில் குடியேறினார்கள். காலப்போக்கில் அவர்களும் சிங்களவர்களாகவே மாறி விட்டார்கள். மலைநாடுகளில் இருந்து வேறு இடங்களில் குடியேறியவர்கள் தங்களை சிங்களவர்களாகவே பெயர் மாற்றிக் கொண்டார்கள்.

தென்னாபிரிக்காவில் அரசியல் பிணக்குகளை தீர்த்த பின்னரே நல்லிணக்க முயற்சிகளில் இறங்கினார்கள். அரசியல் ரீதியான உரிமைகளும் அடையாளங்களும் உத்தரவாதப்படுத்தப்பட்ட பின்னரே தேசிய ரீதியில் செயலாற்ற வேண்டும். அதனால் தான் அரசியல் முன்மொழிவுக்களை சமஷ்டியாக முன் வைக்கிறோம்

வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் கிராமங்களாகும். தமிழினை சட்டப்படி ஏற்றுக் கொண்டால் தமிழ்பிரதேசங்களில் வாழும் தமிழர்கள் வாழ்வார்கள். தமிழர்கள் கலாசாரம் வளரும். அவ்வாறு இல்லை என்றால் நாம் பெரும்பான்மை மொழி கலை கலாசாரங்களுக்குள் அமுக்கப் பட்டுவிடுவோம் என்ற அச்சம் கொள்ள தோன்றுகிறது அவ்வாறு அமிழ்ந்துவிட வைப்பது இனப் படுகொலைக்கு ஒப்பானது எனச் சட்டம் சொல்கிறது.

எமது இன தனித்துவத்தை வலியுறுத்திக்கொண்டே தேசியத்தை நோக்கி முன்னேற வேண்டும். சிறுபான்மையினர் தமக்கு அங்கீகாரம் கிடைக்க முன்னர் தேசிய ரீதியாக செயற்பட்டால் அவர்கள் பெரும்பான்மை இனத்திற்குள் இரண்டற கலந்து விடுவார்கள். கிறிஸ்துக்கு முன்னரே வடக்கு கிழக்கில் பேசப்பட்டு வந்த தமிழ் மொழியினை கொச்சைப்படுத்த வேண்டுமா என நீங்களே சிந்தியுங்கள். (ம)

# 'வர்தா' புயல் இன்று சென்னைக்கு நகரும்; வடக்கு, கிழக்கிலும் கடல் கொந்தளிக்கும்

## மீனவர்கள், கடற்படையினருக்கு எச்சரிக்கை அறிவிப்பு




யாழ்ப்பாணம் டிசெ.12

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கத்தால் உருவாகியுள்ள 'வர்தா' என்ற சூறாவளி எதிர்வரும் தினங்களில் வடமேல் திசையில் இந்தியாவை நோக்கி நகரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இன்று திங்கட்கிழமை மாலை இந்தியாவின் சென்னை பிரதேசத்தின் கரையோரப் பகுதிக்குள் பிரவேசிக்குமென்றும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த கட்டமைப்பின் அழுத்தம் காரணமாக கடலில் இருந்து 200 தொடக்கம் 300கிலோமீற்றர்தூரத்திலானகரையோரப் பிரதேசத்தில் மணித்தியாலத்துக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும். கடல் கொந்தளிப்புடனும் காணப்படும். கடும் மழையையும் எதிர்பார்க்க முடியும்.

இந்த கடல் பிரதேசம் மீன்பிடி நடவடிக்கைகளுக்குப் பொருத்த மற்றதுடன் மிகவும் அனர்த்தத்தைக் கொண்டதாகவும் அமைந் திருக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வடக்கு மற்றும் தென் கிழக்கு கடல் பகுதியிலான ஆழமான மற்றும் ஆழமற்ற கடல் பிரதேசங்களில் தற்காலிகமாக 70 கிலோ மீற்றருக்கும் 80 கிலோ மீற்றருக்கும் இடைப்பட்ட வேகத்தில் காற்று வீசும்.

இதனால் இன்று மீன்பிடி மற்றும் க்டல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென்று மீனவர்கள் மற்றும் கடற்படையினருக்கு வளி மண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, இந்தப் புயல் தாக்கம் அதிகமாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படும் தமிழ் நாட்டின் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் உள்ள கல்வி நிலையங்களுக்கு இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (ம)

# மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைக்கு முடிவு

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திர னுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்ட மா அதிபர் ஜயந்த ஜயசூரிய பரிந்துரை செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் இவ்வாறு வழக்குத் தொடருமாறு சட்ட மா அதிபர் பரிந்துரை செய்துள்ளார் என்று பிரதமர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்தியவங்கிபிணைமுறிமோசடியுடன் தொடர்புடைய பசுவல் ட்ரஸரீஸ் நிறு வனம் மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுனர் ஆகியோருக்கு எதிராகக் குற்றவியல் மற்றும் சிவில் சட்டத்தின் அடிப்படையில் வழக்குத் தொடரப்பட முடியும் என சட்ட மா அதிபர் திணைக்களம் தெரி வித்துள்ளதாக கொழும்பு தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கோப் அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் அறிக்கை என்பனவற்றின் அடிப்படையில் மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பிரதமர், சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் கோரியதற்கு அமைய அறிக்கை தயாரிக்கப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-15)

வாழ்த்துகின்றோம்



எங்கள் ஆச்சிக்கு இன்று அகவை 90 பூர்த்தி

திருமதி சரஸ்வதி ஆறுமுகம்
(இளைப்பாறிய ஆசிரியர், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)
எங்கள் அன்புக்குரிய ஆச்சிக்கு
இதயபூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகுக.

246, 4A, கோவில் வீதி, நல்லூர்.
'அம்பாள் அகம்',
மருதனார்மடம், இணுவில்.

பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள்.

(அ-052)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.